உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] சௌமிய - ஆனி - 10—7—69 [ இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## பத்தி வெள்ளம்

"பித்தனைப் பெருந்தேவர் தொழப்படும் அத்தனை அணி ஆமாத்தூர் மேவிய முத்தினை அடியேன் உள்ளுயறலும் - பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே" என்று பாடுகின்றார் தமிழாசிரியராகிய திருநாவுக்கரசர். இறைவன் மனோ வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டவன் - சித்தமும் செல்லாச் சேட்சியன். ஆயினும், அவன் பத்திவலையிற் படுவோனாகின்றான். எனவே, இறைவனைப் பத்தியினாலல்லாது அடைதல் இயலாது.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே - புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்", "உள்ளம் உள்கலந்து ஏத்தவல் லார்க்கலால் கள்ளம் உள்ளவருக் கருள்வானலன்", "என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப் - பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும் - அன்போ டுருகி அகங்குழை வார்க்கன் றி - என்பொன் மணியினை எய்தவொண் ணாதே" என்பனபோன்ற அருள்மொழிகள் இறையன்பின் - பத்தியின் இன்றியமையாமையை எடுத்தோதுவன. ஆகவே, மக்கள் உள்ளத்தில் பத்தியை வளர்க்கும் நெறியே பாங்குடைய நன்னெறியாகும்.

மக்கள் பத்தியுடையவராயின், இறைவன் அவர்களுக்கு அருள்புரிவதில் பித்துடையவனுகின்றான். அதனால், அவன் பெருந்தேவரால் தொழப்படும் பெரியோனாயினும், 'பித்தன்' எனப்படுகின்றான். அப்பெருமானை அப்பர் பெருமான் சிறிதே தம உள்ளத்தில் நினைந்த காலத்தில் அவரது உள்ளத்தையும், உயிரையும் ஒருங்கே கொள்ளை கொள்ளத்தக்க பத்திவெள்ளம் பரந்து பெருகிற்றாம். 'இதனை உங்கள் உள்ளத்தில் குறிக் கொண்டு நோக்குங்கள்' என்று அவர் நமக்குத் தமது அனுபவப் பயனை அருளிச்செய்கின்றார்.

பத்தி வெள்ளம் பரந்து பெருகுமாயின், அதற்குக் கரை இல்லை; சிறை இல்லை; மேடு இல்லை; பள்ளம் இல்லை; எங்கும் ஒரே இன்பம். இருவினை மாமரம் எதிர்த்து நில்லா; வேரோடு பறிந்து விழும். இறந்து பிறந்து உழலும் பிறவி வெப்பத்திற்கு அங்கு இடம் இல்லை. அதனால், 'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்; இருநிலத்தில் எமக்கெதிராவாரும் இல்லை' என்று சொல்லி இறுமாந்திருக்கும் நிலை உண்டாகும்.

இத்தகைய பத்திவெள்ளம் பரந்து பெருகுவதற்கு வழி யாது? "குறிகளும் அடையாளமும் கோயிலும்" என்றவாறு அருட்பெரு நிலையங்களாகிய திருக்கோயில்களே. திருக்கோயி லில் நடைபெறும் நித்திய நைமித்திக வழிபாடுகளே பத்தியை வளர்க்கும் பாங்குடை நெறிகளாம். இதுபற்றியே மூவர் முதலிகளாகிய தேவார ஆசிரியர் மூவரும் திருக்கூட்டத்துடன் தலங்கள்தோறும் சென்று பண்ணென்ற இசைபாடிப் பணிந்து பரவும் வழிபாடுகளைச் செய்தனர். அவர்கள் அருட்பணியினால்

அன்று அவம்பெருக்கும் புறநெறிகள் அகன்றொழியச் சிவம் பெருக்கும் திருவுடையதாய்த் தமிழ்நாடு திகழ்வதாயிற்று. அனுதுவாரற்று அடைத்துக்கிடந்த பழந்திருக்கோயில்கள் பலவும் திறக்கப்பட்டுப் புதிய விளக்கம் பெற்றுப் பூசையும், விழாவும் பொலிவுற நிகழும் நிலையைப் பெற்றன. அதனால், மக்கள் பலரும் மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலும், கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தலுமே என்னும் உண்மையை உணர்ந்து உளமார அவற்றில் ஈடுபட்டுப் பயன் பெற்றனர்.

மதிசூடும் அண்ணலாரது நல்விழாப் பொலிவைக் கண்ணினால் கண்டு மண்ணினிற் பிறந்த பயனை உண்மையிலேயே மக்கள் அடைந்தநிலை அண்மையில் பலர் கண்ணாரக் கண்டு களித்த ஒன்று. தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட திருக்கோயில்களில் முதன்மை பெற்றது 'வைத்தீசுவரன் கோயில்' என வழங்கும் திருப்புள்ளிருக்குவேளூர். இங்குச் சிவபெருமான் வைத்தியநாதனாய் வீற்றிருந்து, வந்து வழிபடும் அன்பர்கட்கு உடற்பிணியையும், உயிர்ப்பிணியையும் போக்கியருள்கின்றான். இப்பெருமானை "செடியாய உடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்" என்று ஞானசம்பந்தரும், "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் - தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்று நாவுக்கரசரும் குறிப்பிடுகின்றனர்.

சிவபெருமான் அம்பிகை தைலபாத்திரத்துடன் தையல் நாயகியாய் வரத் திருக்கைலையினின்றும் எழுந்தருளிவந்து இங்கு அப்பெருமாட்டியோடும் வீற்றிருந்து அருவாய வல்வினைநோய் நீக்கி அடியவர்க்கு அருள்புரிகின்றான். அவ்விருவர்க்கும் நடுவில் அருமருந்தாய் அமர்ந்து அருள்புரியும் அறுமுகக்கடவுள் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி எனப் பெயர்பெற்றுத் திகழ்பவர். இவரை, "ஆதி வைத்தியநாத புரிக்குகன்" என்று குறிப்பிடுகின்றார் குமரகுருபர அடிகள். இங்குத் திருக்கோயிலுக்குள் இருக்கும் 'சித்தாமிர்தம்' என்னும் திவ்விய தீர்த்தம் செடியாய உடல் நோய்க்கும், தீவினைக்கும் சிறந்த மாற்று மருந்தாய் விளங்குகின்றது.

'சம்பாதி' என்னும் புள்வேந்தன் யோசனைபோய்ப் பூக் கொணர்ந்து, வெண்மணலே சிவமாக வேதத்தின் மந்திரத்தால்

வழிபடப்பெற்றவன் இங்குள்ள இறைவன். 'சடாயு' என்னும் புள்வேந்தனும் உடன் வழிபாடு செய்தான். இவ்விரு புள் வேந்தரோடு 'இருக்கு' என்னும் வேதமும், 'வேள்' என்னும் முருகனும், 'ஊர்' என்னும் சூரியனும் வழிபட்டுப் பேறுபெற்ற காரணத்தால் 'புள் - இருக்கு - வேள் - ஊர்' எனப் பெயர் பெற்றது இத்தலம். இவர்களில் முருகக்கடவுள் முதன்மை பெற்று விளங்குவதால் இத்தலம் சிறந்த சுப்பிரமணியத்தலமாக வும் விளங்குகின்றது. அங்காரகன் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் அங்காரக வாரம் இத்தலத்திற்குச் சிறந்த நாளாகும்.

புள்ளிருக்குவேளூர்த் திருக்கோயில் தொன்றுதொட்டே தருமையாதீனத்திற்கு உரியதாய்ச் செம்மையாகப் பரிபாலிக்கப் பெற்று அவ்வப்பொழுது வேண்டிய திருப்பணிகளும், அஷ்ட பந்தன கும்பாபிடேகங்களும், மற்றும் நித்திய நைமித்திக விழாக்களும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இதுபொழுது இவ்வாதீனத்தில் அருளாட்சி செலுத்திவரும் 25-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருட்பார்வையில் திருக்கோயில் முழுவதும் சிறந்த திருப்பணிகள் பல செய்யப் பெற்றுச் சுவாமி, அம்பாள், விநாயகர், முருகர் மற்றும்பரிவாரங் கள் அனைத்துச்சந்நிதிகட்கும் குண்டமண்டலவேதிகாதி அமைப் புக்களுடன் சிறந்த யாகசாலை அமைத்து அகண்ட திருமுறைப் பாராயணத்துடன் வேதாகமோக்தமாக நூற்றுக்கு மேற்பட்ட சிறந்த சிவாசாரியர்களைக்கொண்டு மிகச் சிறப்பாக நடத்து வித்த அஷ்டபந்தன சுவர்ணபந்தன மகாகும்பாபிடேக வைபவக் காட்சி மக்கள் யாவராலும் என்றும் மறக்கற்பாலதன்று. எங்கும் மக்கட்கூட்டம்; உந்து வண்டிகள்; பேருந்து வண்டிகள்; மற்றும் பல வாகனங்கள். இவ்வாறு இத்தலத்தின் உள்ளும் புறம்பும் எள்விட இடமின்றி நிறைந்து நின்றது பக்தர் வெள்ளமா? பக்தி வெள்ளமா? என்று வினவும்படி வியப்புறு நிலையைத் தந்தது.

வேத ஓசையும், வேள்வியின் ஓசையும், இன்னிசை நாத மும், இயங்களின் முழக்கமும் எங்கும் பரவி எவரது இதயத்தை யும் இறையருள் இன்பத்தில் ஆழ்த்தின. தோத்திரம், சாத்திரம், புராணம் முதலியவைபற்றிய சமயச் சொற்பொழிவு

களும், இன்னிசை யரங்குகளும் அன்பைப் பெருக்கி ஆனந்தத்தை விளைவித்தன. "முத்து விதானம் மணிப்பொற்கவரி" என்னும் அப்பர் திருப்பதிகத்துள் "நணியார் சேயார் நல்லார் தீயார் நாள்தோறும் பிணிதான் தீரும்என்று பிறங்கிக் கிடப்பாரும் மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கள்" "வீதிகள்தோறும் வெண்கொடியோடு விதானங்கள்" என்பது முதலாக அருளப்பட்ட வைபவங்கள் அனைத்திற்கும் இன்று இலக்கியமாய் இலங்கியது வேளூர்.

மிகச் சேய்மையில் உள்ளார்க்குப் பயன்படும்படி திருச்சி வானொலி நிலையத்தார் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது பாராட்டத்தக்கது. மக்கள், விழாவிற்குச் சிறிதும் இடையூறின்றி வந்து செல்வதற்குப் பெரிதும் வாய்ப்பாக அரசியலார் புகைவண்டி, உந்து வண்டிகளைச் சிறந்த முறையில் தக்கவகையில் ஏற்பாடு செய்திருந்தமையும், காவல் துறையினர் கருத்துடன் பணி புரிந்தமையும் குறிப்பிடத்தக்கன. எல்லா வகையிலும், யாவரும் வியக்கும்வண்ணம் நடைபெற்ற இம்மகாகும்பாபிடேக நிகழ்ச்சி ஏனைய எல்லாத் திருக்கோயில்களின் நிகழ்ச்சிக்கும் எடுத்துக் காட்டாக இலங்கியது. இங்ஙனமே நம் தமிழகத்தின் திருக்கோயில்கள் பலவற்றிலும் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகளில் மக்கள் கலந்துகொள்வார்களாயின் அவர்கள் உள்ளத்தில் பக்தி வெள்ளம் பரந்து பெருகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

---


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்.

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ. 4—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்.
தருமபுரம். மாயூரம் அஞ்சல்.
தஞ்சை மாவட்டம்.

உ
குருபாதம்

## குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

### " இல்லென வேண்டா "

'இல்லை என்கிற வீட்டில் பல்லியும் சேராது' என்பது ஒரு பழமொழி. இது, 'வறுமையால் வந்து இரப்பவர்க்கு இல்லை என்னாது இயன்ற அளவு ஈதல் வேண்டும்' என்பதை வற்புறுத்துவது. "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் - குலனுடையான் கண்ணே உள" என்னும் திருக்குறளுக்கு இப்பொருளும் பொருள் எனக் கொள்ளப்படுகின்றது.

"ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர் -
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று"

என்பன புறநானூற்று வரிகள். அறுபான்மும்மை நாயன்மார்களுள் ஒருவர், இல்லையே என்னாத இயற்பகையார் என்பது யாவரும் அறிந்தது. ஆயினும், "இசையா ஒருபொருள் இல் என்றல் யார்க்கும் – வசையன்று வையத்தியற்கை" என்கின்றது நாலடியார். எனவே, இருப்பதை இல்லை என்று மறைத்துச் சொல்வதுதான் வசையாகுமன்றி, இல்லாததை இல்லை என்று சொல்வது வசையாகாது என்பது விளங்கும். என்றாலும, 'நம்மிடம் இல்லாததை ஒருவன், 'ஈ' என இரக்க, நாம் அதனை 'இல்லை' என்று சொல்லும் நிலை உண்டாகுமாயின், அதைவிட வாழ்க்கையில் நமக்கு வரக்கூடிய துன்பம் எதுவும் இல்லை; இறப்புத் துன்பங்கூட இத்துன்பத்திற்கு ஈடாகாது' என்கின்றார் திருவள்ளுவர்.

"சாதலின் இன்னாதது இல்லை; இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை."

இல்லாததை இல்லை என்று சொல்வதே இத்துணைக் கொடியதாகுமானால், உள்ளதை இல்லை என்று சொல்வது எத்துணைக் கொடியதாகும்! எனினும், இங்கு நாம் குறிப்பிடுவது இரப்பவர்க்கு இல்லை என்று சொல்வதை அன்று; வேறொன்றை. அஃதாவது, "உலகத்தார் உண்டென்பது இல்லென்பான்

வையத்து – அலகையா வைக்கப் படும்." எனத் திருவள்ளுவர் வேறோரிடத்தில் கூறியதையே நாம் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

இதனுள், "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்னும் விதிப்படி, "உலகத்தார்" என்றது உயர்ந்தோரைக் குறித்தது. பருப்பொருள்களை அறிதல்போல நுண்பொருள்களை அறிதல் எல்லார்க்கும் இயல்வதன்று; அறிவிலும் அனுபவத்திலும்முதிர்ந்த உயர்ந்தோர்க்கேகூடுவதாம். அதனால், நுண்பொருள்களைப் பற்றிய கொள்கைகளில் உயர்ந்தோர் சொல்லியுள்ள சொற்களாகிய உரையளவையின்வழி ஏனையோர் நிற்றல் வேண்டுமன்றி, அதற்கு மாறாகத் தாம் சிலவற்றைக் கூற முற்படுதல், தாய்க்கு மகள் வாழ்க்கைமுறை கற்பித்தல் போல்வதாம்.

அஃகி அகன்ற அறிவுடைய ஆன்றோர் தமது பேரறிவாலும், அனுபவத்தாலும் நுண்பொருள்கள் பலவற்றைக் கண்டு உலகிற்குக் கூறுகின்றார்கள். அவற்றை அவர்கள் கண்டவாறே பிறர் காண இயலாவிடினும், அவர்கள் உரையை அமைதியுடன் கேட்டுப் பின் ஆய்ந்துணர்தல் வேண்டும். அவர்கள் அவ்வாறு உயிர்க்கு உறுதி பயக்கும் வகையில் கண்டு கூறிய நுண்பொருள்கள் பல. அவை, உலகிற்கு முதல்வனாகிய இறைவன் ஒருவன் உளன்; காணப்படாத அக்கடவுட்கு வேறாயும், காணப்படுகின்ற பலவகை உடம்புகட்கு வேறாயும் உயிர் என்பன பல உள. அவற்றிற்குப் பிறப்பு ஒன்றேயாகாது, எடுத்த உடம்பு பின்நீங்க மற்றோர் உடம்பு வருதலாகிய மறுபிறப்புக்கள் பல உள அப்பிறப்புக்களுக்கும், அவற்றில் வரும் இன்பத் துன்பங்கட்கும் காரணமாக நல்வினை, தீவினை என்னும் இருவினைகள் உள்ளன. அவற்றால், உயிர்கள் சுவர்க்கம், நரகம், பூமி என்னும் மூன்றுலகங்களிலும் சென்று தாம் செய்த இரு வினைப்பயனை நுகரும். இருவினையொப்பு வந்தபொழுது மெய்யுணர்வு பெற்று வீடு (முத்தி) அடையும்' என்பனவும், பிறவுமாம்.

உயர்ந்தோர், 'கடவுள் உண்டு; உயிர் உண்டு: இருவினை உண்டு; மறுபிறப்பு உண்டு' என்று இவ்வாறு 'உண்டு, உண்டு' எனக் கூறுவனவற்றை இல்லை எனக் கூறுதல் கூடாது என்பதையே மேற்காட்டிய குறளில் திருவள்ளுவர் கூறினார்.

உண்டு என்பது 'அத்தி' என்றும், இல்லை என்பது 'நாத்தி' என்றும் வடமொழியில் சொல்லப்படும். அதனால்,

உயர்ந்தோர் உண்டு எனக் கூறியவற்றை உண்டு என்றே கொள்ளும் கொள்கை 'ஆத்திகம்' என்றும் 'இல்லை' எனப் பிணங்கும் கொள்கை 'நாத்திகம்' என்றும் சொல்லப்படும். ஆத்திகம் உள்ள அன்றே நாத்திகமும் உடன் இருந்து வந்தது என்றாலும், நாத்திகத்தைக் கூறும் நூல் எதுவும் பழமையாகக் காணப்படவில்லை. கல்வி அறிவு ஒழுக்கங்களால் சிறப்பெய்திய பெரியோர்யாவரும் ஆத்திகத்தையே தழுவிநின்றனர். சான்றோர் மொழியாக உள்ள நூல்கள் அனைத்திலும் ஆத்திகமே காணப் படுவதோடு, நாத்திகத்தை மறுத்துரைக்கும் பகுதிகளும் காணப் படுகின்றன.

"நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடைஒன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே"

என்பது அப்பர் திருமொழி.

"நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனனா கிலியர்"

என்று 'உறையூர் முதுகண்ணன் சாத்தனார்' என்னும் சங்கப் புலவர் ஒருவர் 'சோழன் நலங்கிள்ளி' என்னும் பெரு வேந்தனுக்கு அறிவுறுத்தினர். இதனுள் 'நல்லதன் நலன்' என்பது ஒருவர் செய்யும் நற்செயலுக்குப் பயனாகப் பின்னர் அவருக்கு விளையும் நன்மை. 'தீயதன் தீமை' என்பது அங்ஙனமே, அவர் செய்த தீய செயலுக்குப் பயனாகப் பின்னர் விளையும் தீமை, இவைகளை 'இல்லை' என்போர் - அஃதாவது 'இருவினையும் இல்லை; அவற்றால் நன்மை தீமைகள் விளையும் என்பதும் இல்லை' என்று கூறுவோர் நாத்திகர். 'அவரது கூட்டுறவு உனக்கு வேண்டா' என்பது அப்புலவர் அறிவுறுத்திய அறிவுரை. 'கடுவன் இளவெயினனார்' என்னும் மற்றொரு புலவர் முருகனைப் பாடுமிடத்து "மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார் நின் நிழல்" என்று பாடுகின்றார். இவற்றால் எல்லாம் சான்றோர் சென்ற நெறி ஆத்திகமே என்பது இனிது விளங்கும். இந்நெறி பற்றியே திருவள்ளுவரும் "உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையா வைக்கப் படும்" என்றார்.

இவ்வாறு சான்றோர் ஆத்திக நெறியில் நின்று, 'உண்டு, உண்டு' எனக் கூறிய பலவற்றுள் முதலாவது பொருள் கடவுள். அதனை உண்டு எனக் கொள்ளின், ஏனைய பொருள்கள் உண்டு என்பது தானே பெறப்பட்டுவிடும். அதனால், கடவுள் உண்மையையே பெரியோர் முதன்மையாக வற்புறுத்துகின்றனர். மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்திலே அமர்ந்திருந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக மூவாயிரம் திருமந்திரங்களை அருளிச்செய்த திருமூலர், 'யோக சமாதியினாலும், ஞான அனுபூதியாலும் உயர்ந்தோர் கண்டு கூறிய முழுமுதற் பொருளாகிய இறைவனை இல்லெனல் வேண்டா' என்று பரிந்துரைக்கின்றார்:

" வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா; இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே."

'இறைவன் எல்லாம் வல்லவன்; அதனால் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பூதபௌதிகங்களாகிய அனைத்துப் பொருள்களையும் தன் இச்சை வழியே அமைக்கின்றான். எல்லையில்லாத கடல்நீரை 'வடவா முகாக்கினி' என்னும் தீயிடை வைத்துக் கரையின்றியே நிற்கச் செய்தான். (வன்னிக்கிறை - வடவைத் தீ. வாரணம் - கடல்.) இஃதொன்றே அவனது அளவில் ஆற்றலுக்கும்; அவனாலேயே இவ்வுலகம் நடைபெறுகின்றது என்பதற்கும் போதிய சான்றாகும். ஆகவே அத்தகைய ஈசனை (ஐஸ்வரியம் உடையவனை - எல்லாப் பொருளையும் தன்னுடையனவாக உடைய தலைவனை) இல்லை என்று கூறிப் பிணங்குதல் வேண்டா. ஏனெனில், தேவர் முதல் எல்லா உயிர்கட்கும் அவற்றது தகுதிக்கேற்ப அவன் அல்லும் பகலுமாக இடையறாது உடனாய் நின்று அருள் புரிந்து வருகின்றான்' என்பது இத் திருமந்திரத்தால் அறியும் அரும்பொருள். நாவுக்கரசரும்,

" அந்திவட் டத்திளங் கண்ணியன், ஆறமர் செஞ்சடையான்
புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்யென்பனோ
சந்திவட் டச்சடைக் கற்றை அலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட் டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே"

என்று, தம்போலும் அனுபவம் உடையார்க்கு அனுபவப்பொருளாய் நிற்கும் இறைவனை இல்லை என்று கூறிப் பிணங்கல் வேண்டா என்று அருளிச்செய்தார்.

" உன்னும்;உளது; ஐயம்இலது; உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து "

என்று திருவருட்பயன் தெளிவிக்கின்றது. எங்கள் ஆதிபரமாசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

" ஈசனடியில் இருக்கையிலே எங்கெங்கும்
ஈசனடி தேடி இளைத்தேனே — பேசரிய
பொற்பதத்தன் செங்கமலப் பொற்பாதன் றன்னுடைய
நற்பதத்தைக் காணுமுன் நான் "

என்று அருளிச்செய்தார். அஃதாவது, 'நாம் இருப்பதே ஈசன் திருவடி நிழலில் தான்; ஆனால் நாம் அதனை அறியாமல் ஈசன் எங்கேயிருக்கின்றான் என்று தேடி அலைகின்றோம்' என்பதாம். எனவே, ஈசனடியின் கீழே இருந்துகொண்டே ஈசன் எங்கே என்று தேடி இளைப்பது, வெள்ளத்துள் நாவறண்டு நிற்பது போன்றதும், பகலிலேநின்று கதிரவன் எங்கே என்று தேடுவது போன்றதும் ஆகும் என்பது கருத்தாயிற்று. இதனையே,

" வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்திருளாம்
கள்ளத் தலைவர் கடன் "

என்கின்றார் உமாபதி சிவாசாரியார். அருள் நெறியில் இங்ஙனம் வற்புறுத்தப்படுகின்ற இக்கடவுள் உண்மையையே திருவள்ளுவரும் தமது அறநூலாகிய திருக்குறளில் முதற் குறளிலே வற்புறுத்திக் கூறினர்.

" அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு "

இதனுள் 'முதற்றே' என்ற தேற்றேகாரம், 'உலகிற்கு முதல்வனாகிய கடவுள் இருக்கவே இருக்கின்றான்; ஆதலின் உளனோ இலனோ எனச் சிறிதும் ஐயுற வேண்டுவதில்லை' என்பதை விளக்கிநிற்கின்றது. இவ்வாறு அருள்நெறிப் பொருளே அறநெறியிலும் இருத்தலை அறிந்து இறைவன் உண்மையை யாவரும் உணர்ந்து பயன் பெறுவார்களாக

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

( மலர் 28, இதழ் 7, பக்கம் 408 இன் தொடர்ச்சி )

**1—6—69 ஞாயிற்றுக்கிழமை** **பட்டிமன்றம்**

வாழ்வின் வளத்திற்கு வள்ளுவர் கூறும் காரணம் இன நலமா? மனநலமா? என்ற பொருள்பற்றி நடந்த பட்டி மன்றத்தைத் தொடங்கிவைத்து, செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா ஜகந்நாதன் M. A. அவர்கள் ஆற்றிய தொடக்க உரையில், பட்டிமன்றத்தின் விதிமுறைகளையும், பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும் பற்றி விளக்கினர்கள்.

தமிழக அரசு சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர், கா. கோவிந்தன் M. A., அவர்கள் இப்பட்டிமன்றத்துக்குத் தலைமையேற்று ஆற்றிய தொடக்க உரையில், 'வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா வையகத்திற்கே தனிச்சிறப்பைத்தரும் திருவிழா. இவ்விழாவில் பட்டிமன்றம் நிகழ்வது வள்ளுவர் கூறும் கருத்துக்களை நன்கு உணர வாய்ப்பாகும். வாழ்வின் வளத்திற்கு வள்ளுவர் கூறும் காரணம் இனநலமா? மனநலமா? என்பதுவிவாதத்தலைப்பு, என்றுகுறிப்பிட்டுபட்டிமன்றவிவாதத் தைத்தொடங்கி வைத்தார்கள்.

'இனநலமே' என்ற கட்சித் தலைவர் புலவர், திரு. கீரன் அவர்களும் புலவர், திரு. இரா. மணியன் B. O. L., B. T., அவர் களும், திரு. தெ. ஞானசுந்தரம் M. A , அவர்களும் 'வாழ்வின் வளத்திற்கு வள்ளுவர் கூறும் காரணம் இனநலமே' என வாதிட்டார்கள்.

'மனநலமே' என்ற கட்சித் தலைவர் கவிஞர் கோவை, திரு. இளஞ்சேரனர் அவர்களும், திரு. சொ. சிங்காரவேலன் M. A., அவர்களும், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் 'வாழ் வின் வளத்திற்கு வள்ளுவர் கூறும் காரணம் மனநலமே' என வாதிடடார்கள். இறுதியில் இனநலமே என்ற கட்சியின் கருத் துக்களை மறுத்து மனநலமே வள்ளுவர் கூறுவது என வலியுறுத் திப்பேசினர் கோவை இளஞ்சேரனர். பின்னர் மனநலமே என்ற கட்சியாரை மறுத்து இனநலமே என வலியுறுத்திப் பேசி ஞர் புலவர் திரு. கீரன்.

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர், திரு. கா. கோவிந்தன் M. A ; அவர்கள் தமது முடிவுரையில் இரு கட்சியாரின் கருத்துக்களையும் எடுத்துக்கூறி தமது கருத்துக்களையும் சொல்லி இனத்தைப் பொறுத்தே மனநலம் அமைகிறது என்று குறிப்பிட்டு வாழ்வின் வளத்திற்கு வள்ளுவர் கூறும் காரணம் 'இனநலமே' என்று தீர்ப்பு வழங்கினர்கள்.

**2—6—69 திங்கட்கிழமை** **கருத்தரங்கம்**

தமிழ்நாடு அரசு அறநிலைய அமைச்சர், மாண்புமிகு, K. V. சுப்பையா அவர்கள் ஆற்றிய தலைமையுரையில் :-

'திருவள்ளுவரை- திருக்குறளைத் தெரியாதவர்கள் ஒருவரும் இருக்க முடியாது. தெரியாதவர்கள் நாகரிகமற்றவர்கள் என்றே கருதப்படுவர். திருக்குறள் எல்லோருக்கும் பொருந்தியதாய் உள்ளது. பைபிளோ, குர்ஆனே, வேதங்களோ அவ்வம் மதத்தினரால் மட்டுமே போற்றப்படுகிறது. ஆனல் திருக்குறளோ எல்லா மதத்தினராலும் அனைவராலும் போற்றப்படுகிறது. இது ஒன்றே குறளின் பெருமைக்குச் சான்ருகும். திருக்குறளில் கிடைக்காத பொருளே இல்லை. காமதேனு எல்லாம் தருவதைப்போலவே தமிழ்மறையும் எல்லாவற்றையும் தருகிறது. மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணமாய் இருக்கிறது' திருக்குறளில் "ஒரு அமைச்சர் எவ்வாறிருக்கவேண்டும் ; ஒரு ஆசிரியன் எவ்வாறிருக்க வேண்டும்; ஒரு மாணக்கன் எவ்வாறிருக்கவேண்டும் ; ஒரு மனிதன் எவ்வாறிருக்க வேண்டும் ;". என்பதெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. கடவுள் என்பவர் யார் ? கடவுளுக்குரிய இலக்கணம் என்ன ? என்ன ? என்பது கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. குறளைப்போன்ற வேறொரு நூல் இல்லை. குறள் எங்கும் இடம் பெற்றுள்ளது. குறளின்படி ஒவ்வொருவரும் நடந்தால் எத்தீங்கும் விளைவதற்கு வழியில்லை' என்ற கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

திரு. சி. சு. செல்லப்பா M. A., L. T,, அவர்கள் 'வள்ளுவர் வழியில் இளங்கோ' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றும் போது ; வெண்பாவாகிய தண்டை உடைய அறம் என்ற தகளியில், பொருள் என்ற திரியிட்டு இன்பம் என்ற நெய்யூற்றி செம்மைச் சொல்லால் விளக்கேற்றினர் வள்ளுவர். 'பண்புடையார்ப்பட்டுண்டு உலகம்'' என்றது குறள். இமயமலையும், முனிவர் இருப்பதால் பொதியமும் சான்றோர்கள் வழ்வதால் புகாரும் அழியாது எனக் காரணம் கூறுகிறது சிலம்பு.

இதிலிருந்து குறட்கருத்தையே சிலம்பும் கூறுகிறது என்பதை அறியலாம்.

திருமணமாகி கோவலனும், கண்ணகியும் இன்பம் துய்க்கும் போது, கோவலன் கண்ணகியைப் பாராட்டுவானுய், கண்ணகி யின் சாயலுக்கு நாணி மயில் காட்டையும், நடைக்கு நாணி அன்னம் நீர் நிலைக்கும் ஏகிய தென்றும் பாராட்டுகின்ருன், மீண்டும்,

" குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாகியும்
மடநடை மாதுநின மலர்க்கையின் நீங்காது "

இருக்கிறது பசுங்கிளி என்று பாராட்டுகின்ருன். இந்த இடத் திலே "குழலினிது யாழினிது" என்ற குறட்கருத்து இடம் பெறுவதைக் காண்கிறேம். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும்" என்பதும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" "ஊழிற்பெருவலியாஉள?" என்பதும் குறள் கூறும் கருத்து. இம்மூன்றையுமே நோக்கமாகக் கொண்டு எழுந்ததுவே சிலப் பதிகாரம் என்ற கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

திரு. அகிலன் அவர்கள் " வள்ளுவர் வழியில் இன்றைய புலவர்கள் " என்ற தலைப்பில் விரிவுரையாற்றும்போது

' திருக்குறள் இந்தஇரண்டாயிரம் ஆண்டுகளாக அழியாமல் வாழ்ந்துவருவதற்குக் காரணமே புலவர்கள்தான். புலவர்கள் நடைமுறையில் கடைப்பிடித்து வளர்த்து வந்தனர். வள்ளுவன் ஓர் உலகக்கவி; குறள் உலகப் பொதுமறை என்பவற்றைக்கண்டு தமிழர்களுக்கே காட்டியவன் ஒருபுலவன். " வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு " என்று சொன்னவன் பாரதி.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகு இயற்றியான்.

என்று சாபம் இட்டான் வள்ளுவன்

" இனியொரு விதி செய்வோம் அதை
எந்நாளும் காப்போம்.
தனி யொருவனுக்கு உணவு இலை எனின்
ஜகத்தினை அழித்திடுவோம் "

என்று சட்டம் போட்டான் பாரதி.

" கொலை வாளினை எடடா "

என்று கத்தியையே எடுக்கச் சொன்னான் பாரதிதாசன்.

இன்றைய எழுத்தாளர்களும் புலவர்கள்தான். காலமாறுதலுக்கேற்பப் புலவனும் மாறவேண்டியிருக்கிறது. டாக்டர் மு. வ. வின் நாவல்களிலே திருக்குறட்கருத்து பரவலாகக் காணப்படும். மு வ வின் 'கயமை' என்ற நாவல் குறளின் கயமை அதிகாரத்திற்கு ஒரு விளக்கமாகவே உள்ளது. அன்புடைமையைப் பற்றியே கல்கி ஒருநாவலை எழுதியுள்ளார் " ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் " என்றகருத்தை ஒப்புரவைமையமாகக் கொண்டு " புதுவெள்ளம் " என்ற நாவலை நான் எழுதியிருக்கிறேன் என்ற பல கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

திரு. மா. ரா. இளங்கோவன் M. A., அவர்கள் வள்ளுவர் வழியில் சாத்தனார் என்றபொருளில் சொற்பொழிவாற்றும்போது

திருக்குறளின் கருத்துக்களை, சொற்களை மணிமேகலையில் சாத்தனார் எடுத்தாண்டுள்ளார். அதுமட்டுமல்ல சில இடங்களில் குறட்பாக்களையே எடுத்தாண்டுள்ளார்.

சித்திராபதி, மாதவியின் தோழி வயந்தமாலையை அழைத்துக் குலவொழுக்கப்படி மாதவி ஆடல் நிகழ்த்தவரவில்லை. ஊரார் பழிமொழி கூறுகின்றனர். ஆதலின் மாதவியையும் மணிமேகலையையும் ஆடுதற்பொருட்டு அழைத்துவா என்று கூறி விடுக்கிறாள். இதை வயந்தமாலைமூலம் கூறக்கேட்ட மாதவி,

" மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள் "

என்று கூறுகின்றாள். மாதவியின் பதிலில் "இறைகாக்கும்காப்பு" என்ற கருத்து காணப்படுவதை அறியலாம், என்பனபோன்ற பல கருத்துக்களை வெளியிட்டார்கள்.

வள்ளுவர் வழியில் சாணக்கியர் என்ற தலைப்பில் கோவை. திரு. நா. கிரிதாரிபிரசாத் B. A., B. L., அவர்கள் விரிவுரையாற்றும்போது, சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தில் கூறிய வடமொழிக் கருத்துக்களையும் திருவள்ளுவர் கூறிய திருக்குறள் பொருட்பால் கருத்துக்களையும் ஒப்பிட்டுக்காட்டி, பல சிறந்த கருத்துக்களை வெளியிட்டார்கள்.

**3—6—69 செவ்வாய்க்கிழமை** **பட்டிமன்றம்**

திருமதி. R. இராஜரத்தினம் M. A., L. T., அவர்கள் பட்டி மன்றத்திற்குத் தலைமையேற்று, தலைமையுரையில், "இந்தப் பட்டிமன்றத்துக்குக் கொடுத்த தலைப்பு சிந்தித்துப்பார்த்துக் கொடுத்த தலைப்பு. பெண்ணின் பெருமையைப் பெரிதும் விளக்கு வது திருக்குறளா? பெரியபுராணமா? என்பது அத்தலைப்பு. இப்போது திருக்குறளைப்பற்றியோ, பெரியபுராணத்தைப் பற்றியோ ஏதாவது சொன்னால் அதையே அந்தந்தக் கட்சிக் காரர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளுவார்கள். ஆதலால் இந்தத் தலைமையுரையில் ஒன்றும் சொல்லாமல் பட்டிமன்றத்திற் குரிய நெறியில் நின்று பேசுமாறு இருகட்சியிலும் நின்று பேசு பவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்கள்.

திருக்குறளே! என்ற கட்சிக்குத் தலைமையேற்ற திருமதி. பு. பா. இராஜராஜேஸ்வரி M. A., அவர்கள் தமது கட்சிக் கருத்தை வெளியிடுகையில், "இப்போது இருந்து வருகின்ற பெண்மை, 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. பெண்மை என்பது பெண்ணியல்பைக் குறிக்கும், கற்பு ஒழுக்கம், பொறுமை, விருந்தோம்பல், சுற்றம், தழுவல், வாழ்க்கைத்துணை நலம் என்று பலவாறு சொல்லி பெண்ணின் பெருமையை எடுத்துக்கூறுவது குறள். பெண்மையின் முழு மையை முதன் முதலாக எடுத்துச் சொல்லி புரட்சி செய்தவர் திருவள்ளுவர். திருக்குறள் சூரியனைப்போன்றது. சூரியன் தானே பிரகாசிப்பதுபோல இருப்பது. பெரியபுராணமோ சந்திரனைப்போன்றது; தானே ஒளிதர முடியாமல் சூரியனிட மிருந்து வாங்கிப் பிரதிபலிப்பதுபோல உள்ளது. எனவே, பெரிய புராணம், குறளிலிருந்தே பெண்மையை எடுத்துச் சொல்லு கிறது என்று குறிப்பிட்டார்கள்.

பெரியபுராணமே! என்ற கட்சித் தலைமையேற்ற திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள் தமது கட்சிக்கருத்தை வலி யுறுத்துகையில், பெரியபுராணம், திருக்குறளிலிருந்து எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நாங்களும் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால் பெரிதும் விளக்குவது எது? என்பது தலைப்பாதலால் பெரியபுராணமே பெரிதும் விளக்குகிறது பெண்ணின் பெரு மையை, எங்கெங்கே எல்லாம் பெண்ணின் பெருமையைப் பேசலாமோ அங்கங்கே எல்லாம் பேசுகிறது பெரியபுராணம். இசைஞானியார், காரைக்காலம்மையார், ஞானியார் ஆகிய மூவரைப்பற்றி மட்டுமல்லாது மற்றவர்களைப்பற்றியும் ஆங்காங்கே

எடுத்துரைக்கிறது பெரியபுராணம். ஆனால் குறளிலோ அறத்தில் வாழ்க்கைத்துணையிலும், இன்பத்துப்பாலிலும், பொருளில் பெண்வழிச்சேரல், விரைவின் மகளிர் என்ற இரு அதிகாரங்களிலும் மட்டுமே எடுத்துரைக்கிறது. அதிலும் பொருளில் பெண்மையைச் சிறுமைப்படுத்துவதாகவே உள்ளது. ஆனால் பெரிய புராணத்தில், சுந்தரர் வரலாற்றில் கமலினி, அநிந்தைகளைப் பற்றி, 'வந்துவானவர் ஈசர் அருளின' என்றும், பரவை நாச்சியாரைப்பற்றி, 'அற்புதமோ சிவனருளோ அறியேன்' என்றும், சம்பந்தர் புராணத்திலும் மணமகளைக் கூறுமிடத்தும் எளிமைப்படுத்தாமல் செம்பொன்னுகவும், சிவநேசச் செட்டியார் மகளைக் கூறும்போது, "கருணை வெள்ளம்" என்றும் குறிப்பிடுகின்றார். ஆனால் குறளிலே பெண்ணைக் கூற்றமாக்கி, "கூற்றமோ கண்ணோ பிணையோ" எனக் கூறுகின்றார். சிறுமைப்படுத்துகின்றார். ஆதலால் பெரியபுராணமே பெண்ணின் பெருமையைப் பெரிதும் விளக்குகிறது என்று கூறினார்கள்.

பெண்ணின் பெருமையைப் பெரிதும் விளக்குவது திருக்குறளே! என்ற கட்சியில் திருமதி. இராஜேஸ்வரி அவர்களும், திருமதி செல்லப்பாப்பா கிரன் அவர்களும் தங்கள் கட்சிக் கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

பெண்ணின் பெருமையைப் பெரிதும் விளக்குவது பெரிய புராணமே! என்ற கட்சியில் திருமதி, ஏழிசைவல்லி M.A., அவர்களும், வித்துவான் திருமதி, ப. நீலா அவர்களும் தங்கள் கட்சிக் கருத்தை வலியுறுத்திப்பேசினார்கள்.

பின்னர், திருக்குறளே! என்ற கட்சியின் தலைவி திருமதி. இராஜஇராஜேஸ்வரி M. A., அவர்களும், பெரியபுராணமே! என்ற கட்சியின தலைவி திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்களும் தங்கள் தங்கள் கட்சிக் கருத்துக்களைத் தொகுத்துரைத்தார்கள்.

பின்னர், இருகட்சிக் கருத்துக்களையும் தலைவர் எடுத்து விளக்கிய பின்னர், நடுவரின் சொற்படி ஒட்டெடுப்பு நடத்தியதில் பெண்ணின் பெருமையைப் பெரிதும் விளக்குவது பெரிய புராணமே! என்று முடிவாயிற்று.

( இதன் தொடர்ச்சி 453-ம் பக்கம் பார்க்க )

தருமையாதீனம் வேளூர் மகாகும்பாபிஷேக விழா :



மக்கள் வெள்ளம் மனமுருகிக் கும்பாபிஷேக தரிசனம்செய்தல்.

வேளூர் மகாகும்பாபிஷேக விழாவில் :



தருமை, திருவாவடுதுறை, குன்றக்குடி, காஞ்சி, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும்
திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்.

இவை ஏமகண்ட இரண்டு குறட்பாக்களின் விளக்கமாக அமைந்துள்ளன என்பது நன்கு புலனாகும்.

> " சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரும் நோய் "

> " வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
> வேண்டாமை வேண்ட வரும் "

சான்றோர்கள் எத்துணைப் பெருமை கொடுத்து இதனைப் போற்றியுள்ளார்கள் என்று எண்ணும்போது உள்ளம் பூரிக்கத்தான் செய்கிறது. இன்னும் பின்னேவந்த ஆசிரியர்களும் தெய்வத் தமிழ் மறையைப் பாராட்டியுள்ளார்கள். அவர்களில் ஒருவர் கவிராட்சதர் எனப் போற்றப்படும் கச்சியப்பமுனிவர் ஆவர்.

கச்சியப்ப முனிவர் இன்றைக்குச் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் ஆவர். அவர் காஞ்சியம் பதியிலே நற்குடியில் அவதரித்து சிவஞான மாபாடிய கருத்தாவாகிய சிவஞான சுவாமிகளிடம் பயின்றவராவர். அவர் விநாயகபுராணம், தணிகைப்புராணம் பேரூர்ப்புராணம் திருவானைக்கா புராணம், பூவாளூர்ப் புராணம் ஆகிய பல புராணங்களைப் பாடியவர் ஆவர். அவர் பாடியருளிய விநாயக புராணத்தில் ஒருபகுதி அரசியற்கைப் படலம் என்பது. இப் பகுதியில் திருக்குறள் கருத்துக்கள் நிரம்பவுள்ளன. சோம காந்தன் என்ற சௌராஷ்டிர நாட்டை ஆண்டுவந்த அரசன் அவன் மகன் ஏமகண்டன் என்பானுக்கு உபதேசிப்பதுபோல் இப்பகுதி அமைந்துள்ளது.

தமிழ்ப் பெருமக்கள் எச்செயலைத் தொடங்கினும் கடவுளை வழுத்திய பின்னரே தொடங்குவர். அதேபோன்று திருவள்ளுவ நாயனாரும் கடவுள் வாழ்த்தை முன்னே செய்தனர். குறைவிலா நிறைவாகிய கடவுளின் பெருமையை, வேண்டுதல் வேண்டாமையிலான், என்ற சொற்றொடரால் கூறினார். ஆனால் அவர் மனம் அமைதிபெறாமையால் அளவற்ற பெருமையினை யுடைய கடவுளை 'எண்குணத்தான்' என்றுகூறி அளவில் ஆற்ற லுடைமை முதலிய எண்குணங்களை விதந்து ஓதினார். திருமுறை ஆசிரியருள் ஒருவராகிய திருமூலர் " எண்குணம் எய்தலும் ஆமே " என்று பத்தாந் திருமுறையில் இச்சிறப்புத் தொடரை

ஆண்டுள்ளார். பின்னே வந்த திருநாவுக்கரசரும் 'எண் குணத்துளோமே' என்று அணைத்தோர் இயல்பை விளக்குகிறார்.

கச்சியப்பமுனிவர் இக்கருத்துக்களை உள்ளடக்கிக் கடவுளை வழிபடுதல் இன்றியமையாதது என்று சொல்லவந்தபோது பாடியருளிய பகுதியினை ஒப்ப நோக்கி மகிழ்க.

"விருப்பொடு வெறுப்பிலாத மிக்க எண்குணத்தோடு ஒன்றாய்
இருப்பவன் யாவன் அன்னான் இணையடி வணங்கல் வேண்டும்."

இனி அறங்கூறவந்த திருவள்ளுவ நாயனார் முதற்கண் இல்வாழ்க்கையைப் பற்றிக் கூறுகின்றார். இல்வாழ்வான் பிரமச்சாரி வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவர்க்கும், வேண்டப்பட்டாரால் வெறுக்கப்பட்டவர்க்கும், வறிஞர்க்கும் இறந்தார்க்கும் ஆகிய மூவர்க்கும் தனக்குரிய கடமையினைச் செய்யவேண்டும். மேலும் பிதிரர்க்கும், தெய்வத்துக்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், தனக்குமாக ஐவகையிடத்தும் அறத்தினைச் செய்தல் இல்லறத்தார்க்குரிய இன்றியமையாக் கடனும்.

பிரமசாரிவனத்துறை வோன்பேணுந் துறவி தென்புலத்தார்
குரவர்தேவர் விருந்தொக்கல் கோக்கள்மறையோரிறந்தோர்கள்
இரவலாளருறுப்பிலர்களெய் தும்பிணியாளர் கண்முதியோர்
விரவுபாலர்சிசு தமதுமிசையாரி வரையோம்புகவே.

என்ற கச்சிய முனிவர் பாடல் இக்குறட்பாக்களை இனிது விளக்குகின்றது. இல்லறத்திலே மிகச் சிறப்பான அறமாகப் பேசப்படுவது செய்ந்நன்றியறிதல். அஃதாவது ஒருவன் செய்த உதவியை உணர்ந்து பாராட்டுதல் என்பதாம். நன்மையை மறக்காமையோடு தீமையை மறத்தலையும் வற்புறுத்துகிறார் நாயனார். பின்னே மறத்தினால் வரும் கேட்டைக் கூறுகிறார்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

"பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்முலை அறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும், குரவர்த்தபுத்தலும் முதலிய பாதகங்களைச் செய்தல்" என்று பரிமேலழகர் எந்நன்றி கொன்றார்க்கும் என்ற சொற்குப் பொருள் கூறினார். (தொடரும்)

# செய்திகள்

## தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு சௌம்ய ஆடிமீ 8உ (23—7—69) புதன்கிழமை காலையில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்கும் ஏனைய சமயாசாரியர்கட்கும் விசேஷ அபிஷேக ஆராதனையும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராண படனமும் நடைபெற்றன.

இரவு ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானை வாகனத்திலும், ஸ்ரீ சேரமான்பெருமாள் நாயனர் குதிரை வாகனத்திலும் திருவீதியுலாவாக எழுந்தருள வேத பாராயணமும், அற்புத விளக்கச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல், வித்துவான், திரு வி சா. குருசாமி தேசிகர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன், மன்னன்பந்தல், அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், "செஞ்சொற் கொண்டல்" வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனர் M. A., Dip. Ling. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார். தருமையாதீனம். திரு. S. சம்பந்த ஓதுவார் தருமையாதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர், திரு ஆர் வேலாயுத ஓதுவார் முதலியவர்களால் அற்புதவிளக்கச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் கேட்டும் பயனடைந்தனர்.

## குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்குப் பாராட்டு விழா.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகச் சார்பில் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக

நியமனம் செய்யப்பெற்றுள்ளதைப் பாராட்டும் வகையில் சிறப்பு விழா 8—8—69 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி அளவில் நடைபெற்றது.

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் மேலவை உறுப்பினர் பொறுப்பேற்குமுன் தருமையாதீனத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்துரை கூறினார்கள்.

மாலை 4 மணி அளவில் பல்கலைக் கல்லூரியில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை சமயப் பிரசார நிலயம் வித்துவான் ஸ்ரீமத் சோம சுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரைகூறி மலர் மாலை அணிவித்தார்கள் கல்லூரிமுதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், பேராசிரியர் திரு சி. அருணைவடிவேலு முதலியார், மாணவர்கள் சார்பில் இராஜகோபாலன் ஆகியோர் பாராட்டுரை கூறினர். பேராசிரியர் திரு வி சபேசனும், மாணவர் கழகச் செயலர் கலியமூர்த்தியும் நன்றியுரை கூறினர். இறை வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது

## ஆடிப்பூரத் திருநாள்

**வேலூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேலூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான் திருவருட்சத்தியாய் விளங்கி நின்று அருள்பாலிக்கும் ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கு 6-8-69 புதன்கிழமை முதல் தொடங்கி ஆடிப்பூரத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது விழா நாட்களில் ஸ்ரீ அம்பாள் கற்பகவிருக்ஷம், சிம்மம், அன்னம், கிளி, யானை, குதிரை முதலிய வாகனங்களிலும் திருத்தேரிலும் வீற்றிருந்து அருள் வழங்கும் அருட்காட்சி நடைபெறுகிறது. 15-8-69 வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத் திருநாள். அன்று அம்பாள் சித்தாமிர்தத் தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்தருளலும், இரவு வெள்ளிரதக் காட்சியும் நடைபெறும்.

**திருக்கடவூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிதேவஸ்தானத்தில்

ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு ஆடிப்பூர மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. 6—8—69 புதன்கிழமை கொடியேற்றம் நிகழ்ந்தது. 14—8—69 வியாழக்கிழமை திருத்தேர்த்திருவிழாவும், 15—8—69 வெள்ளிக்கிழமை அமிர்த புஷ்கரிணியில் தீர்த்தங் கொடுத்தருளலும், துவஜாவரோகணமும் நடைபெறும் நாள் தோறும் ஸ்ரீ அபிராமி அம்பாள் வெள்ளி யானை, வெள்ளி ரிஷபம், யாளி, குதிரை, அன்னம் முதலிய பலவகை வாகனங்களில் எழுந்தருளி அருட்காட்சி வழங்குவதை அன்பர்கள் கண்டு களிக்கின்றனர்.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயம்

# ஸ்ரீ சுந்தரர் குருபூஜை விழா

சென்னை, தியாகராய நகரில் உள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 23—7—69 மாலை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ கயிலாயநாதருக்கும், ஸ்ரீ சுந்தரமூர்த்திக்கும் திருமுறை அர்ச்சனை நடைபெற்றது. திரு கே. சி. தியாகராஜன் சுந்தரர் தேவாரப் பாடல்களைப் பண்ணுடன் பாடி மகிழ்வித்தார். தமிழ் நாடு தெய்வீகப் பேரவைச் செயலாளர் திரு ஆர். அர்ச்சுனன் விழாவிற்குத் தலைமைவகித்து குருபத்தினியின் அவசியத்தை வற்புறுத்தினர். பேராசிரியர் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார் சுந்தரர் வாழ்வியல் தத்துவம் பற்றிப் பேசும்போது சுந்தரர் வாழ்வு மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு உலக வாழ்வு போலவே தோன்றினும் ஊன்றிப் பார்ப்பவர்கட்கு அவரது வாழ்வு உயரிய ஞான வாழ்வு என்பது தெளிவாகும் என்று அகச்சான்றுகளுடன் விளக்கிப் பேசினர். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறும்போது சுந்தரர் சைவர்களின் குலதெய்வமாக விளங்குபவர், அவர் இல்லையேல் அறுபத்துமூவர் வரலாறில்லை. அந்நாயன்மார்களின் வரலாறில்லையேல் சைவர்கள் வாழ்வியல் முறைகள் இல்லை. எனவேதான் அவரைக் குலதெய்வமாக மாதவச் சிவஞான சுவாமிகள் போற்றியுள்ளார் என்று குறிப்பிட்டார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா இனிது நிறைவு பெற்றது.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( சௌம்யஹு ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய )
(17—8—69 முதல் 16—9—69 முடிய )

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும்; தொழில் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். வரவு செலவு சமமாகும்; தீராத வியாதி திரும். சுபகாரியங்கள் நடைபெறும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும்; வீண் அலைச்சல்களையும், மனஸ்தாபத்தையும் உண்டுபண்ணும், உத்தியோகத்தில் பலவிதமான மாறுதல்களைக் காட்டும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். சதா சஞ்சார பலன் கொடுக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுப பலனைத்தரும்; வெகு காலமாய் எதிர்பார்த்த தொழில் ஸ்திரமாகக்கிடைக்கும், புதிய பிரபுக்கள் தெரிசனமும், தொழில் விருத்தியும் ஏற்படும்; விரோதிகள் ஓடி விடுவார்கள், ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனையே தரும். தாவர ஜங்கம சொத்துக்கள் கிரய விக்ரயத்தால் லாபம் தரும். விவசாயம் ஓங்கும். தான்யவிருத்தி ஏற்படும். நூதன கிரக வஸ்திராபரண லாபங்கள் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் (மகம்) பூர்ணசுபமாகும். இல்லறம் ஓங்கும். தனலாபம் ஏற்படும்; தொழில் விருத்தியாகும், (பூரம், உத்திரம் ¼ மிச்ரமான பலனைத்தரும். நினைத்த காரியம் கொஞ்சம் தாமதமாகவே நடக்கும்; எல்லாம் கடைசியில் சுலபமாகவே நடக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். விசேஷமான அலைச்சல்களும், அதிகமான செலவினங்களும் ஏற்படும். ஜீவனம் ஓங்கும்; மருந்துகள் சாப்பிட நேரிடும்: வெகுகாலமாய் நடக்காத காரியங்கள் நடக்கும்; விவசாயம் ஓங்கும். புண்ணியமான பலன்கள் கிடைக்கும், ஆரோக்யம் உண்டாகும். புதன் வியாழன் சுபமாகும்.

### 7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் வியாதிகள் நிவர்த்தியாகும். உலக பிரசித்தியும், அசாத்ய சாதனங்கள் ஏற்படச்செய்யும், நூதனமான பிரபுக்கள் தெரிசனமும் சிநேகமும் உண்டாகும்; தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சுபங்கள் நடைபெறும். வீடு கட்டுதல் முதலான வேலைகள் நடக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும், நஷ்ட தனங்கள் வந்துசேரும்; ஜீவனம் விருத்தியாகும்; நூதனமாக பிரபுக்கள் தெரிசனம் ஏற்படும், கீர்த்தி பத்திரம் கிடைக்கும். ஸஸ்ய தான்ய விருத்திகள் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் மாதம் ஆரம்பத்தில் மிச்ரமான பலனையும், பின்பு பூர்ணமான சுப பலனையும் தரும், ஜீவன சுகம்

ஓங்கும், புத்திராதிகளால் விசேஷமான நன்மை உண்டாகும். ஆரோக்யம் தரும். துக்கம் நிவாரணம் ஆகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 10 மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். உத்தியோகத்தில் உயர்வும் பெரியோர்களின் சிநேகமும் ஏற்படும். ஆரோக்யம் ஏற்படும். வியாதிகள் பூர்ணமாக சௌகரியம் ஆகும்; வம்ச விருத்தி ஏற்படும்; விவசாயம் ஓங்கும், தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 11 கும்பம்-அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$


கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும் வரவு செலவு சமமாகும், நூதனமாக வஸ்திராபரணச் சேர்க்கைகளும் உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும் சனி, ஞாயிறு சுபமாகும்.

### 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், பூர்ணமான சுபத்தைத்தரும், ஆரோக்யம் உண்டுபண்ணும். அடிக்கடி சஞ்சாரபலம் ஏற்படும். ஜீவனலாபம் ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். நஷ்டமான பொருள் வந்துசேரும், சகலமும் சுலப சாத்தியமாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு: மேற்படி ஆவணி மாதத்தில், கிரகங்களின் சஞ்சாரம் பூர்ண சுபத்தைத்தரக்கூடியதாக அமைந்து இருக்கிறது; எங்கும் விவசாய விருத்தியும், அமைதியும் உண்டாகும், அநேகவிதமான அற்புதங்களும் தோன்றும். தக்ஷிணதேசம் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பார்; சுபம் உண்டாகும்.

வேலூர் மகாகும்பாபிஷேக விழாவில் வாழ்த்துரைக் கூட்டம் :



சென்னை உயர்மன்ற நீதிபதிகள் அறநிலைய ஆணையர், பெருமக்கள் ஆகியோருக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆசி அருளல்.

வேலூர் மகாகும்பாபிஷேக விழா வாழ்த்துரைக் கூட்டம் :



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் ஆசியுரையை
திருச்சி அகில இந்திய வானொலியில் அஞ்சல் செய்தல்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 28, இதழ் 7, பக்கம் 379 இன் தொடர்ச்சி )

## கூடற் காண்டம்

### (19) நான்மாடக் கூடலானது

பூதங்களல்ல பொறியல்ல வேறுபுலனல்ல உள்ள மதியின்
பேதங்களல்ல இவையன்றி நின்றபிறிதல்ல என்று பெருநூல்
வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளியென்ப கூடன் மறுகில்
பாதங்கணோவ வளையிந்த நுதிபகர்வாரை ஆயுமவரே.

தமிழ் கொழிக்கும் கூடலான மதுரை நான்மாடக்கூடலாகிய அற்புதம் இங்கே நினைக்கப்படுகிறது. கதிர்மதி மிலைந்த வேணிக் கண்ணுதல் வருணன் ஏவிய அதிர்கடலை வறந்திடச் செய்த ஆடலைக் கண்டோம். இனி அவனேவிய முதிர்மழை ஏழின்மேல் நான்முகிலைப்போக்கி, மதுரையைக்கூடலாக்கிய வண்ணம் காண்போம்.

தன் ஆணைப்படிப் பொங்கிவந்த கடல் வற்றிடவும் மானமும் வலியும் குன்றாமல் நின்ற வருணன் மதுரை நாயகனின் ஆடலை நன்கு தெளியாமல் செழுமுகில்கள் ஏழினையுங் கூவியழைத்தான். 'நீவிர் கடல் வற்றியது என்னும்படிக் குடித்து இடித்து ஒளிவளர் மதுரையை ஒல்லென அழித்து மீளுங்கள்' என்றான்.

**அழிக்க முந்திய எழிலி :**

வருணனின் ஆணைபெற்ற வெளுத்த மேகங்கள் முந்நீர்ப் பள்ளம் வறப்பக் குடித்து மெய் கருத்துப் பாரும் பிலமும் விள்ள, மால்வரைகளெட்டும் வெடிபட, மேருசாய, ஆழிநீர் ஞாலந்தாங்கும் அரவு உடல் நெளிய, மழையைப் பொழிந்தன. பருத்த வெள்ளிய பூசணிக்காய்கள் போல் ஆலிசிந்த, திரண்ட

திண் பளிங்குத் தூண்கள் போல் தாரைசோர, பிரளயகால உருத்திர மூர்த்தியை ஒத்து சராசரமனைத்தும் சூழ்ந்து போர்த்தன. பசிய சுடர் விசும் பச்சை, கா ரொளிய நீலம், உடுவன்ன நித்திலம், பொற்துவியல், செஞ்சுடர் மணிகள் பவளங்கள் வானிலிருந்து உதிர்ந்தன. மேகங்கள் இம்மணிகளை மண்ணகத்தில் உதிர்க்கும் காட்சி தத்தம் காதலர்களோடு கொண்ட ஊடலிடத்தில் தேவமங்கையர் வெறுத்தெறிந்த கலன்கள்போல இருந்ததெனக் காட்டுவார் ஆசிரியர். ஞாலம் மடியும் நாள் இந்நாளேயென்று படியெலாம் புரக்கும் கோனும் நகருளார் பலரும் வருந்தினர்கள்.

## கண்ணுதலான் தானே காக்கும் :–

> 'கண் ணுதல் மூர்த்தி தானே யின்னமும் காக்கு மென்னைப்
> புண்ணிய நகரா ரோடும் பொருக்கெனக் கோயில்'

புகுந்தான் பாண்டியன்; 'காப்பான் அழிக்கத் தொடங்கில் நங்கவலை எவரோடு இனியுரைப்போம். அவனடிமையல்லவோ நாம்' என்று வருணன் விட்ட கடலை வற்றச்செய்த பெருமானின் திருவடியில் சரண் புகுந்தான்.

'விடையவனே! கங்கை தாங்கும் சடையவனே! மேரு சாபப்படையவனே! எங்கள் துன்பத்தைத் துடைத்துக் காத்திடுக' என்ற மன்னன் வேண்ட, தென்னர்க்கெய்திய இடுக்கண் என்றும் தீர்க்கும் முன்னவன், தன் சடைமேலிருந்த நான்கு மேகங்களை யழைத்து 'நீவிர் இம்மதுரையின் எல்லை நான்கும் சூழ்ந்து நான்மாடமாகி நெடுமாரிஏழின் செயலை மாற்றுங்கள் என விடுத்தான்.

## புண்ணியனடியை நண்ணினரோத்தார் :–

நாற்றிசையும் சந்துவாய் தெரியாவண்ணம் ஒரு குடிலாய் மேகங்கள் ஒன்றியபோது நகருளார், அமைச்சர், வேந்தன், நால் கருவித்தானை, சராசரம் பிறவும் பொன்னனுள் பாகன் தாளில் புக்கமர்ந்திருந்தார் போல முன்னைநாள் தன்னினும் இன்பத்தால் மூழ்கினர்கள். வருணன் ஏவிய முகில்கள் இறைவனின் திருச்சடை மேகங்கள் நான்கின்மேலும் தம்வலிமையைக் காட்டமாட்டாமல் பின் வாங்கின. கடல் வறப்ப வாங்கி உடல் வறப்பப் பெய்த மேகங்களும் வெள்கி நிற்க வருணனும் வெள்கி நின்றான்.

**பிணியகற்றிய பெருந்தகை :—**

நாணம் மீதூர ஒடுங்கிய மானத்தால் நடுங்கிய மனத்துடன் பொற்றாமரைக் கரையருகே வருணன்வர அவனது வயிற்று நோய் தணிந்தது. தழைத்த நன்றியுணர்வோடு உள்ளமெல்லாம் அன்பாக உரையெல்லாம் இசையாக வள்ளலை வாழ்த்தி விதிப்படி பூசனை செய்யத் தொடங்கினான். ஐங்கனியமுதமும், ஐந்து கௌவியமும் காமதேனு தந்துதவ பனிமலர், சந்தம், கந்தம், மணிக்கலன், பசும்பொன்னுடை இனையன பிறவுங்கொண்டு சேற்கண் நங்கைதன் பதியைப் பூசித்தான். அருச்சனை உவந்த ஆதிஅமலன் நீ வேண்டியது யாது என்று வினவ 'ஒன்றாலுங் கரையாத இந்த வயிற்றுநோய் நின்றன் திரைத்தடத்தருகே நீங்கப்பெற்றேன். இதற்கு நான் அல்லவோ நன்றி செலுத்தவேண்டும்' என்று பணிமொழி புகன்று பாதம் பற்றினான்.

**குற்றமே குணமாக் கொள்ளும் குழகன் :—**

'உன் பெருமை தெரியாமல் உன்னைச் சோதிக்கத் தொடங்கிய என் பேதமையை என்னென்று சொல்ல. வானவர் கோன் நினது பெருமையை எடுத்துக்கூறியும் நான் நினைச் சோதித்தன்றோ உண்மை உணர்ந்தேன்.

"வேதமுதற் கலைக்காட்சி முதலளவை விரிஞ்சன்முதல்
விண்ணோர் செய்யும்
சோதனையுள் அகப்படாச் சோதியுனைச் சோதிக்கத்
துணிந்தேன் அந்தோ
பேதைமையே னிடத்தென்ன குணங்கண்டென்
பிணிதீர்த்தென் பெற்றாயாசை
கோதமிலாய் குற்றமே குணமாகக் கொள்வதுநின்
குணமோ ஐயா"

ஆறுமதி முடிக்கணிந்த அருட்கடலே! எனது வயிற்று நோய் மட்டுமின்றி மாறுபடும் இருவினையும் மலவலியுங்கெட அருளினாய். உய்வு பெற்றேன். மணி, மருந்து மந்திரம் மூன்றும் இத்தடாகமேயெனத் தேறினேன். கடலாலும், முகிலாலும் சோதிக்கத் தொடங்கிய எனக்குப் பேரருளாளன் நீ என்பதை என் நோய் தணிவித்து அறிவுறுத்தினாய்! எனது பிழையிரண்டினையும் பொறுத்தருள்க' எனப்பணிந்து அருள்பெற்றான் வருணன். மதுரையும் நான்மாடக்கூடல் எனும் புதிய பெயர் பெற்றது.

( வளரும் )

# சிலப்பதிகாரக் காப்பியக் கோயில் - - ஓர் எழிலோவியம்

திரு. செ. வைத்தியலிங்கன் எம். ஏ., எம். லிட்.,

( மலர் 28, இதழ் 7, பக்கம் 394 இன் தொடர்ச்சி )

## உலவாக் கட்டுரையின் உரைநுட்பம் :

காதலின்ப எல்லைக் கோட்டிலே நின்று பூரித்திடும் கோவலன் கண்ணகியை நோக்கி உலவாக்கட்டுரை பல பாராட்டுகிறான். இது சிந்தனைக் களஞ்சியமாகவே விளங்குகிறது; அதனை விளக்கமுறச் சிறிது காண்போம்.

> " மாசறு பொன்னே வலம்புரி முத்தே
> காசறு விரையே கரும்பே தேனே
> அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
> பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
> மலையிடைப் பிறவா மணியே யென்கோ
> அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
> யாழிடைப் பிறவா இசையே யென்கோ
> தாழிருங் கூந்தல் தையால் நின்னை "

கண்ணிற்கு இனிமையான மாசறவோடிய பொன்னை ஒப்பாய்; ஊற்றின் இன்பத்தான் தூய்மையான முத்தை யொப்பாய்; உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற மணப்பொருளை யொப்பாய்; சுவையின் இனிமையால் கரும்பை யொப்பாய்; இனிய மொழியை யுடைமையால் தேனையொப்பாய்' எனப் பொருள் படுதலால்,

> " கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே யுள "

எனும் திருக்குறளுக்கு இலக்கியமாக அமைந்துவிட்ட பான்மையை அறிஞர்கள் சுட்டுவர். திருவள்ளுவர் களவுக் காமத்திலே கூறிய இக்குறளிலமைந்த புலன் வரிசையையும், இளங்கோவடிகள் கற்புக்காமத்தில் கோவலன்வாய் வெளிப்படுத்திய புலன்வரிசையையும் ஒப்புநோக்கிச் சிந்தித்தலால் உண்மைகள் சில புலனாகும்.

திருவள்ளுவர் :- காணல், கேட்டல், உண்ணல், உயிர்த்தல், உறுதல்.

இளங்கோ :- காணல், உறுதல், உயிர்த்தல், உண்ணல், கேட்டல்.

## மாசறு பொன்னே வலம்புரி முத்தே :

ஊழ்வழி இயங்கும் காதலின்ப ஒழுக்கத்திற்குக் காட்சி முதலாவதாக வேண்டப்படுவதாகும். உலகியலில் பொன்னும் பொருளும், பொருளால் போகமும் அமைதலைக் காணலாம். காட்சியின்பத்திற்கு ஊற்றுக்களனாக - மாசற்ற பொன் மேனியளாகக் கண்ணகி கோவலனுக்குத் தோன்றுகிருள். இருவர் உணர்வும் கலத்தற்கு இது நல்வாய்ப்பாக ஆகும். சான்ருகக் கம்பராமாயணத்தில் மிதிலைக்காட்சிப் படலத்தைச் சிறிது காண்போம்.

"எண்ணரு நலத்தினள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கௌவி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெரு துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்"

"பருகிய நோக்கெனும் பாசத் தாற்பிணித்
தொருவரை யொருவர்தம் முள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்(கு) இதயம் எய்தினர்"

எனவரும் செய்யுட்களால் இராமனும் சீதையும் எவ்வாறு காட்சியால் உணர்வு கலந்தார்கள் என்பதை யுணரலாம். உளவியல் வல்லுநர்களும் புலன்பற்றி ஆராய்ந்து காணலுக்கே முதலிடம் தருகின்றனர். எனவே களவுக் காமத்தில் முதலிடம் பெறும் 'காட்சி' யானது கற்புக் காமத்துத் தொடக்க நிலைகளிலும் முதலிடம் பெறுதற்குப் பொருத்தமுண்டு.

திருவள்ளுவர் குறிப்பிட்டபடி 'காட்சி'க்கு அடுத்த 'கேட்டல்' இன்பமானது சிலப்பதிகார உலவாக் கட்டுரையில் அவ்வாறு அமையவில்லை; கடைசியாக அமைந்துள்ளது. அல்லாமலும் குறளில் இறுதியாக அமைந்த 'உறுதல்' இன்பம், இதனில் இரண்டாவதாக அமைந்துள்ளது. இவற்றிற்கெல்லாம் காரணம் உண்டா!

அன்பின்ப நெகிழ்ச்சியோடு கணவன் தன்மனைவியைக் கண்டு புணரும் நிலையில், காணலுக்கு அடுத்தபடியாக 'உறுதல்' புலனின்பமே ஓங்கிநிற்கும்; அந்த உலகியல் பெரும்பான்மைபற்றி இளங்கோ இவ்வாறு கூறியிருக்கலாம். அல்லாமலும், காமவேட்கையனாய் நிற்கும் கோவலன், வள்ளுவர் கூறிய அமைப்பிலே கண்டு கேட்டு உண்டு உயிர்த்து 'உறுதல்' இன்பம் பெறும் நெறியிலே - செல்லும் அளவிற்குப் பொறுமையில்லாதவனாயும் இருக்கலாம். எனவே. 'காண லுக்கு அடுத்த சிறப்பினையுடைய 'கேட்டல்' இவளளவில் கடைசி நிலையை அடைகிறது. மேலும்,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்ற அடிப்படையில் கோவலன் எண்ணம் ஓடிவிட்டதோ எனறும் நினைக்கத் தோன்றுகிறது.

புலன்களை வரிசைப்படுத்திக் காணுகையில் வள்ளுவர் 'நீத்தார்பெருமை' அதிகாரத்தில்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

எனக் கூறுகிறாரே என ஐயம் எழலாம். நீத்தார் பெருமைக்கு ஏதுவினைத் தத்துவ அடிப்படையில் கூறுங்கால் அமைத்த இந்தப் புலன்நிலை வரிசையை அகவொழுக்க நுட்பத்தோடு இயைத்துப் பார்த்தால் பொருந்தாது. இந்தப் புலன்களே அவாவாக உருவெடுக்கும்போதுதான் உலகியல் அகவொழுக்கத் தோடு பொருந்திவரும். இல்லறத்தில் காணப்படும் புலன் ஆசைகள் துறவறத்தில் படிப்படியே ஒடுக்கம் பெறும். நாலடியாரில் உள்ள ஒரு செய்யுளால் இந்த நுட்பமும் வெளியாதலைக் காணலாம்.

"மெய்வாய் கண்மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் — கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்"

என்று துறவு அதிகாரத்தில் பொறிகள் வேட்கை அடிப்படையில் கூறப்படும்போது 'மெய்'யாகிய பொறியே முதலிடம் பெறு

கிறது. கட்டுக்கடங்காக் காமத்திற்கு முதலிடமே 'உறுதல்' இன்பத்தில்தான் பொருந்தி நிற்கிறது.

அஃதன்றியும், கிடைத்தற் கருமையான வலம்புரி முத்தின் மூலம் இளங்கோவடிகள், 'உறுதல்' இன்பத்தைச் சுட்டுகிறார். நவமணிகளுள் 'முத்து' ஒன்றே சாணையில் தேய்க்காமல் ஒளிவிடவல்லது. முத்துக்களுள் 'வலம்புரி' மிகமிக உயர்ந்தது. இதனால் மரபின் தூய்மையே அஃதாவது, குலமாட்சி இயல்பான ஒளியுடன் சுட்டப்படுகிறது. கோவலன் கண்ணகிக்குக் கண்ணகியே 'வலம்புரி முத்'தாகக் காட்சியளிக்கிறாள்; எனவே எளிய முத்துமாலை அவள் மார்பகத்தை அணிசெய்யத் தேவைதானா என்று எண்ணிவிடுகிறான். கோவலன் வாக்காக,

"திருமுலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்
ஒருகாழ் முத்தமோ டுற்றதை யெவன்கொல்"

என்பதும் வெளியாகின்றது.

## காசறு விரையே கரும்பே தேனே :

உலகத்தில் மணப்பொருள்களிலும் குற்றமுண்டு; திருமணத்தால் நல்மணம் பெற்ற பொற்புடைக் கண்ணகி அப் பழுக்கற்றவள். எனவே, காசறு விரையாக - உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற நல்மணப் பொருளாகக் கணவனுக்கு அமைகிறாள். ஐம்புலன்களில் நடுவிடமாக 'உயிர்த்தல்' இன்பம் சிறப்பினை எய்துகின்றது.

சுவை யினிமையால் கரும்பை ஒத்தவளாகக் கண்ணகி அமைகின்றாள். கரும்பானது நீர்வளத்தில் செழித்திடும் மருத நிலப் பொருள்; கண்ணகியும், வேந்தொத்த பெருங்குடி வணிகன் மாநாய்கன்தன் நீர்மைநிறைமகளாகப் பிறந்தவள்; தன் கணவனுக்குச் சுவைக் கரும்பினை ஒத்து இனிக்கவும் செய்கின்றாள். அன்றியும், காப்பியம் படைக்கும் கவி வல்லவர்கள் நல் மகளிரைக் கரும்பாகவே உருவகித்தல் இலக்கிய மரபொடு பட்டதாகவும் அமைந்துள்ளது.

(தொடரும்)

# ஞானப்பானை

திரு. நீலகண்ட சர்மா

( மலர் 28 இதழ் 7 பக்கம் 390 இன் தொடர்ச்சி )

எத்தனை ஜன்மங்கள் மண்ணும், மரமாயும், மிருகங்களாயும், மலத்திலும் ஜலத்திலும் பிறந்து இறந்து கடைசியில் கடவுள் கிருபையால் மனிதராய்ப் பிறந்தோம்.

தாயின் வயிற்றில் சிலநாட்கள் கழித்தோம்; குழந்தையாய் விளையாட்டில் பலநாள் கழித்தோம், அதற்கு மேல் தன்னைப் பற்றித் தனக்கே தெரியாமல் மமதையோடு கழிக்கின்றோம். நம் வாழ்வு இனி எத்தனை நிமிஷம் என்று யாரறிவார். இப்படி இருக்கும்போது கடவுளை நினைக்காமல் அவர் திருநாமங்களை வாயார வாழ்த்தாமல் இருப்பது சரியா?

பதவியும் அந்தஸ்தும் நினைத்து சண்டைகள் உருவாக்கி மானமில்லாமல் கெட்டுப்போகிறார்கள். பொறுமையிலும் போட்டியிலும் ஈடுபட்டுப் புத்தியில்லாமல் நடந்து கொள்கிறார்கள். பாவையர் வீட்டில் அடிமைகளாய்க் காலம் கழிக்கின்றனர். கோட்டங்களில் சேவகராகவும், பூஜாரிகளாகவும், பலவித வேஷங்கள் போட்டும் குடும்பம் காப்பாற்றுகின்றனர். வயிறு நிரப்புகின்றனர். தாய் தந்தை மனைவி இவர்களைப்பற்றி சிந்தையே இல்லாமல் வாழ்கின்றனர். அக்கினி சாக்ஷியாய்த் திருமணம்செய்த மனைவியைச் சொற்பனத்தில்கூடப் பார்க்காமல் இருந்துவிடுகிறார்கள். யாராவது இவர்களிடத்துத் தவறுகளை எடுத்துக்காட்டி நல்லவழியில் திருப்ப முயன்றால் அவர்களைத் தமது கொடிய விரோதிகளாய் எண்ணி விடுகிறார்கள். பெரியோர்களையும் அடியார்களையும் இகழ்ந்து பேசுகின்றனர்; உலகமே நம்மால் நடக்கிறது என்று நினைக்கிறார்கள். பிரம்மதேவனும் நமக்கு ஈடில்லை என்றுசொல்லிப் புகழுக்காக யாகம் முதலியன கூடச் செய்கிறார்கள், சத்தியமும் நியாயமும் கெட்டுக்கூட வியாபாரங்களில் பணம் தேடுகிறார்கள். பத்து கிடைத்தால் நூறு போதுமென்றும் நூறுஉல் ஆயிரம் போதுமென்றும் இப்படி மேலுக்குமேல் கிடைக்க வேண்டுமென்ற பண ஆசை மனிதனை இழுத்துக்கொண்டுபோகிறது. இறக்குந்தருணத்தில் ஒரு துளி

கூடக் கொண்டுபோக முடியாது என்று தெரிந்திருந்தும் ஏழைகளுக்கும் சிறிது கொடுப்பதற்குக்கூட தயங்குகிறார்கள். பணப்பயித்தியம் மனிதனைக் குருடனாக்கிவிடுகிறது. எந்தப்பாதகத்தையும் செய்துவிடுகிறார்கள். படிப்பின்பயனைப் பெறாமல் படித்தவன் என்று நினைப்பது போலல்லவா? அந்தோ பரிதாபம்.

ஒவ்வொரு நிமிஷமும் போகப்போக நமது உலகவாழ்வு குறைந்துவிடுகிறது. ஆசையோ அதைவிட வேகமாய் கூடிக்கொண்டு வருகிறது. அளவு இல்லாத ஆசைகளில் அகப்பட்டு திண்டாடும்போதே மனிதன் இறந்து போய்விடுகிறான். எதற்காக ஒவ்வொருவனுக்கும் இயற்கையாகக்கூடிய ஆசைகளை எடுத்துக் கூறவேண்டும் சிவ, சிவ. எல்லாம் அஞ்ஞானத்தின் விளைவு

சிந்தித்துப் பாருங்கள்! நாம் இதுவரை எத்தனை பிறவிகள் எடுத்திருப்போம். கன்மம் எவ்வளவு பலம்வாய்ந்தது. மேலும் வருந்தவேண்டுமா? கன்ம பூமியாகிய இப்பாரத கண்டத்தில் சுலபமாகக் கடவுளை அடைய வழிகாட்டும் இக்கலியுகத்தில் பிறந்தும் நாம் எத்தனைநாட்கள் வீணாக்கிவிட்டோம். நமது ஆயுளோ எவ்வளவு என்று தெரியாது. அதிலும் நோய்வாய்ப்படாமல் இருப்பது எத்தனைநாள்.

பிறக்கும்போதோ இறக்கும்போதோ நமக்கு ஒருதுணையுமில்லை. இடையில் காணும் நேரத்தில் ஒருவனுக் கொருவன் போட்டியும் பொறாமையும் கொள்ளாமல் நல்லவழியில் செல்லுங்கள். கடவுளை அடையும் மார்க்கத்தைச் சிந்தியுங்கள்.

புருஷார்த்தம் (மோக்ஷம்) இருக்கும்போது வேறு அர்த்தத்தை (பணத்தை) ஏன்தேடி வாடுகிறீர்கள். சூரியன் பிரகாசிக்கும்போது மின்மினுப்பூச்சியைத் தேடுகிறீர்களே கண்ணனும் குமரனும் மனதில் களிக்கும்போது உனக்கு வேறுகுழந்தைகளும் வேண்டுமோ? உலகத்தில் காணும் மாயாவினோதங்கள் பார்க்கும்போது ஐயா (பண்) விளையாட்டுகள் வெறும் பேயாட்டங்கள் அல்லவா? சகலவிதமான விபரங்கள் நிறைந்த உலகமே நமது வீடாக அமைந்திருக்கும்போது வேறு மாடிவீடும் வேண்டுமா? அண்டங்களெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் வல்லமை வாய்ந்த விசுவநாதனாகிய தந்தையும் சராசரங்களுக்கெல்லாம் அன்னையாகிய பராசக்தியும் நம்மைக் கவனித்துக் கொள்வார்கள்.

பலனை எதிர்பாராமல் பக்தியுடன் கடவுள் திருநாமங்களை எப்போதும் சொல்லுங்கள். சித்திகிடைக்கும் வரையும் கண்ணில் காணும் எதையும் கடவுளாக உணர்ந்து வணங்குங்கள். யார் ஏது சொன்னாலும் செய்தாலும் கோபம் வராமல் சஹித்துக் கொள்ளுங்கள், அடியார்களைக் கண்டு வணங்குங்கள். பக்தி பரவசத்தால் கூத்தாடுங்கள்

இப்படி உலகில் வாழ்நாளில் மீதியும் செலவழித்துக்கொண் டிருக்கும்போது முன்செய்த வினைகள் நீங்கி தேகம் (உடல்) எங்கேயாவது விழ்ந்துவிடுகிறது. வெகுநாளாகக் காத்திருந்த பிரம்மத்தைக் கண்டு தேறி (ஜீவாத்மா) குதித்துவிடுகிறது.

நாம் இதுவரை சிற்றின்பங்களில் ஈடுபட்டுக் கழித்து விட்டோம் என்று கவலைப்படாதீர்கள். கடவுள் திருநாமங்கள் அனேக மிருக்கின்றன. பிறவியில் யாராயிருந்தாலும் நாவி ருக்குமானால் ஏதாவது ஒரு நாமமாவது சொல்லுங்கள். தினம் ஒருமுறையாவது சொல்லுங்கள் விழித்திருக்கும் பொழுதோ சொற்பனத்திலோ தெரிந்தோ தெரியாமலோ பரிகாசமாகவாவது வேறு யாருக்காவது வேண்டியானாலும் சொல்லுங்கள். எங் கிருந்துவேணுமானாலும் சொல்லுங்கள். நாம ஜபத்தினாலேயே பிறவிப்பயன் அடைந்து விடலாமென்று பாதராயணன் ஸ்ரீதரர் முதலிய பெரியபண்டிதர்களும் சொல்லியிருக்கின்றனர். கீதையும் அப்படியே உபதேசித்திருக்கிறது. வேதங்களும் உபநிஷத்துக் களும் திருநாமஜபத்தின் மகிமையை எடுத்துக் கூறுகின்றன. ஆகையால் பக்தியோடு. சிரத்தையோடு. ஆர்வத்தோடு திரு நாமஜபம் செய்யுங்கள் பிரம்ம சாயூஜ்யம் (ஜீவபிரம்மைக்யம்) கிடைப்பதற்குப் புத்தியுள்ளவனுக்கு இதுபோதும்.

கருணைக்கடலே, எல்லாம் வல்ல இறைவனே, தப்பாயிருந் தாலும் சரியாயிருந்தாலும் எனது வார்த்தைகளை ஏற்றுக் கொள்வீராக.

சிவ சிவ

# அப்பருக்கன்பர்

கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர், வித்துவான்,
திரு. வை. சுந்தரேச வாண்டையார்

ஒரு சொல்தான். அதைச் சொன்னார்; எழுதினார். சிவகதி எளிதின் பெற்றார். அது என்ன சொல்? திருநாவுக்கரசர் எனும் ஒரு சொல்தான். அதை "எழுதியும் கூறியும் என்றும் துன்பில் பதம் பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே" என்கிறது நால்வர் நான்மணி மாலை.

இவ்வப்பூதி அடிகளார் நம் ஐயாற்றுக்கு அருகிலுள்ள திங்களூரினர் நல்லொழுக்கத்தின் அடிப்படையின்மேல் வளரத்தக்கது சைவம் என்பது மரபு இதனை அப்பூதி அடிகள் புராணம் இரண்டாம் பாட்டால் அறிக. இவ்வாறே திருநீல கண்ட நாயனார் புராணத்திலும் நம் சேக்கிழார்பெருமான் கூறியருளியது அறியத்தக்கது அப்பூதி அடிகள் முன்பின் திருநாவுக்கரசரைக் கண்டதில்லை; எனினும் அவர்பால் பெரிதும் ஈடுபாடுற்றார். அதனால் பல கருவிகளுக்குமம், பண்டங்களுக்கும், வீடு, வாசல், முற்றம், கூடம் இவற்றிற்கும் அவர் பெயரிட்டு வழங்கினார். விளம்பரப் பலகைகளிலும் எழுதித் தொங்கவிட்டார். அப்பெயரை எவ்வாறு வழங்கியிருப்பார்.

வேலைக்காரி - அக்கா! அந்தத் திருநாவுக்கரசு எடுத்துவா அரிசி தீட்டுவோம் என்பாள் ஒருத்தி. மற்றொருத்தி- தங்கச்சி! திருநாவுக்கரசு எடுத்துவா அரிசி கொழிப்போம் என்பாள். வேலைக்காரர்கள் - அண்ணே! அந்த வெள்ளைத் திருநாவுக்கரசைப் பால் கறந்தாயா? என்பான் ஒருவன். அடே! திருநாவுக்கரசு! இந்தக் கன்றுத் திருநாவுக்கரசுக்கு நான் பிடுங்கி வந்த திருநாவுக்கரசை உணவு போடு என்பான் மற்றொருவன். என்ன வேடிக்கை அப்பூதி அடிகளாரின் மனைவாழ்க்கை நடைபெறுமாறு!

இந்த நிலைமையில் திருநாவுக்கரசுப்பெருமான் திருப்பழனத்து இறைவரை வணங்கித் திங்களூர்க்குச் செல்லும் வழியில் ஒரு தண்ணீர்ப்பந்தரைக் கண்டார். அதைச் சேக்கிழார் பெருமான்,

" அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பாப்பினதாய்
வளமருவும் நிழல்தரு தண் ணீர்ப்பந்தர் "

எனச் சிறப்பித்துள்ளனர்.

விளம்பரப்பலகை பல சித்திரங்களோடு எழுதித் தொங்க விடப்பட்டிருப்பதையும், அதில் தமது திருப்பெயர் எழுதியிருப்பதையுங்கண்டார் அவர் அடைந்த வியப்புக்கு அளவு இருக்குமா? விவரம் தெரிந்தார். அப்பூதி அடிகள் வாழ்மனை சென்றார் வாகீசப்பெருந்தகையார். ஒரு சிவனடியார் என்று கேட்ட அளவிலேயே நல்வரவேற்ற அடிகளாரை,

" ஆறணியுஞ் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டியகா ரணம்என்கொல்
கூறும்என எதிர் மொழிந்தார் கோதில்மொழிக்
கொற்றவனார் "

அதாவது 'சிவனடியார்கள் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப் பந்தரில் உம்முடைய பெயரை எழுதாது வேறு ஒருவருடைய பெயரை எழுதியதற்குக் காரணம் யாது? என்று கேட்டார் திருநாவுக்கரசர் வேறொரு பேர் என்று கேட்டதும் அப்பூதி அடிகளார்க்கு வந்ததையா பெருங்கோபம். வெம்மை மொழி யான் கேட்க விளம்பினீர் நீர் யாரையா? எந்த லோகத்திலிருந்து இங்குக் குதித்தீர். வேடம் சிவவேடம்; எங்கள் குல தெய்வம் திருநாவுக்கரசு பெருந்தகையார் கல் புணையாகக் கடல் கடந்த செயல் ஏழுலகும் அறியுமே! என் காது பாவம் செய்தது. என்கண் என்ன பாதகம் செய்ததோ? என்று கூறிக்கொண்டார். நீர்யார் என்ற வினவிற்குப் பதில் வருகிறது.

"..................பிற துறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளுமுணர் வில்லாத சிறுமையேன் யானென்றார்"

அதாவது 'சமணசமயப் படுகுழியினின்றும் ஏறும் பொருட்டு இறைவன் சூலை நோயை உண்டாக்கி ஆட்கொள்ளப் பெற்ற உணர்வில்லாத சிறுமையேன் யான்' என்று அருளிச் செய்தார் நாவுக்கரசர். (இங்கே ஒரு காவியச் சுவை கதை அமைப்பில் அமைகிறது. பெரியபுராணம் 15 ஆம் பாடலில் ருத்திரம் (கோபச் சுவை) ததும்புகின்றது. அந்தக் கணத்திலேயே கருணை ரசம் பொழிகின்றது. (17 ஆம் பாடல்).

அதனைக் கேட்டவுடனே அப்பூதி அடிகளார் இரண்டு கைகளும் தலைமேலே குவிய, கண்ணீர் சொரிய, உரை தடுமாற உடம்பெல்லாம் உரோமம் சிலிர்ப்ப நிலத்தின்மேல் விழுந்து திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடித் தாமரைகளைப் பூண்டார். திருநாவுக்கரசு நாயனார் அப்பூதி அடிகளை எதிர் வணங்கி எடுத்தருளினார்.


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

## திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

( மலர் 28, இதழ் 5, பக்கம் 256 இன் தொடர்ச்சி )

### விசேட தீக்கை

மாணாக்கன்: விசேட தீக்கை யாருக்கு உரியது? அதனால் வரும் பயன் யாது?

ஆசிரியர்: மந்ததர சத்திநிபாதத்தால் சமய தீக்கை பெற்றுத் திருவைந்தெழுத்தைத் தூலமாகக் கணித்தும், சிவாகமங்களில் சரியை, கிரியை, யோகம் என்னும் இவைகளை விளக்கும் பாதங்களை ஓதியும், சரியைத் தொண்டுகளைச்செய்தும் நின்றவழி ஆணவமலம் மேலும் பரிபாகம் உற்றுச் சத்திநிபாதம் மந்தமாய் நிகழும். அப்பொழுது சிவபிரானை இலிங்க வடிவில் கண்டு வழிபடுதலாகிய கிரியைத் தொண்டில் இச்சையுண்டாகும். அங்ஙனம் உண்டாகப் பெற்றோர் முன்னர்ச் சமய தீக்கையைச் செய்த ஆசிரியரிடத்தாதல், வேறோர் ஆசிரியரிடத்தாதல் விசேட தீக்கையைப்பெற்றுத் தம் பொருட்டான (ஆன்மார்த்தமான) சிவலிங்கமூர்த்தியை எழுந்தருள்வித்துக் கொடுக்கபெற்றுக் கிரியாபாத முறைப்படி அம்மூர்த்தியை நாள்தோறும் நியமமாக வழிபடுதலாகிய கிரியைத் தொண்டில் நிற்பார்கள். சிவலிங்க மூர்த்தியை எழுந்தருள்வித்துக் கொடுக்கும்பொழுதே அகப்பூசை புறப்பூசை முறைகளோடு யோக முறையும் உணர்த்தப்பெறும்.

கிரியைத் தொண்டினால் ஆணவமலம் மேலும் பரிபாகமுற்ற வழிச் சந்திநிபாதம் தீவிரமாய் நிகழப்பெற்றோர் யோகநிலைக் கண் நிற்பர். எனவே, விசேட தீக்கை மந்தசத்திநிபாதர்க்கு உரியதாய்க் கிரியையைத்தந்து பின் அதுவழியாகத்தீவிரசத்திநிபாதத்தை உண்டாக்கி யோகத்தையும் தரும் என உணர்க. யோகத்திற்கு விசேடத்தில் விசேடமாக வேறு தீக்கை செய்யும் முறையும் சில இடங்களில் உண்டு. விசேட தீக்கை பெற்றுக்

கிரியாபாதத்தில் நிற்போர் 'புத்திரர்' என்றும், யோகத்தில் நிற்போர் 'யோகியர்' என்றும் பெயர் பெறுவர்.

## நிருவாண தீக்கை

மாணக்கன்: சமயம், விசேடம் என்னும் தீக்கைகளால் சரியை, கிரியை, யோகம் என்னும் தவம் முழுவதும் கைவரப் பெறுவதால், நிருவாண தீக்கை ஞானத்திற்கே உரியது போலும்!

ஆசிரியர்: ஆம்! நிருவாண தீக்கை ஞானத்தின் பொருட்டாகவே செய்யப்படும். சரியை முதலிய தவங்களின் முதிர்ச்சியால் மலபரிபாகம் முற்றிய வழிச் சத்திநிபாதம் அதிதீவிரமாய் நிகழும். அப்பொழுது பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பை உள்ளவாறு உணர்தற்கண் பெருவிருப்பு உண்டாகும். அஃதாவது, நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் ஆர்? நான் வந்தவாறு எங்ஙன்? போமாறு ஏது? எனக்கு வரும் இன்பத் துன்பங்கட்குக் காரணம் யாது? துன்பத்தினின்று நீங்கி இடையறுத இன்பத்தில் வாழும் நிலை இல்லையோ? உண்டாயின் அதற்கு வழி யாது? என்று இங்ஙனம் பொருள் இயல்புகள் பலவற்றையும் உள்ளவாறு உணர்தற்கண் பேரவா நிகழும். அந்நிலையில், வேண்டுவார் வேண்டுவதே ஈவோனாகிய சிவபெருமான், ஞானச்செய்தியால் சிவோகம் பாவனையைத் தலைப்பட்டுச் சிவமேயாய் நிற்கும் ஞானகுருவின் சுத்தான்ம சைதன்னியத்தில் ஆவேசித்துநின்று நிருவாண தீக்கையைச் செய்தருளுவான்.

சமய, விசேட தீக்கைகளில் புறவுடம்பு அகவுடம்புகளை மந்திரங்களால் ஓரளவே தூய்மை செய்ததுபோலாது, அத்துவாக்கள் ஆறனையும் முறைப்படி ஒன்றில் ஒன்றை அடக்கி எல்லாவற்றையும் அடக்கிநிற்கும் கலையைச் சோதிக்கும் முகத்தால், ஆறத்துவாக்களையும் பற்றிநிற்கும் சஞ்சித கன்மங்களை முற்றத்துடைத்து, ஆன்மாவை வினைக்கட்டினின்றும் விடுவித்துத்திருவைந்தெழுத்தைமுத்திபஞ்சாக்கரமாகஉபதேசித்துச் சிவாகமங்களில்ஞானபாதத்தைஉணர்த்தும்முகத்தால்முப்பொருளின் இயல்புகளையும் நன்குணரச் செய்தலே நிருவாண தீக்கையாகும். முப்பொருள்களின் இயல்பை உள்ளவாறுணர்தற்குத் தடையாய் இருந்த வினைக்கட்டு ஆணவமல பரிபாகங் காரணமாக மெலிவடைந்து, ஞானாசிரியன் செய்யும் நிருவாண தீக்கையால் அடியோடு அழிந்தமையால், பொருளியல்பு முற்றும்

உள்ளவாறு விளங்குதலே ஞானமாம். பொருளியல்பு முற்றும் உள்ளவாறு விளங்கியபொழுது பொய்யைப் பொய்யென்று கண்டு கழித்து, மெய்யை மெய்யென்று உணர்ந்து பற்றும்நிலை தானே உளதாகும். ஆகவே, நிருவாணதீக்கை தீவிரதர சத்திநிபாதம் உடையார்க்கு உரியதாய், ஞானத்தைத் தருவது என்பது உணர்ந்துகொள்க. இந்நிருவாணதீக்கை அதிதீவிரத்திலும் அதிதீவிரமாய் நிற்போர்க்கு அப்பொழுதே முத்தியைக் கொடுக்கும்வகையிலும், ஏனையோர்க்கு உடம்பு நீங்குங்காலத்து முத்தியைக் கொடுக்கும் வகையிலும் செய்யப்படும். இவற்றுள் அப்பொழுதே முத்தியைக் கொடுப்பது 'சத்தியோ நிருவாணதை' என்றும், உடம்பு நீங்குங்காலத்து முத்தியைக் கொடுப்பது 'அசத்தியோ நிருவாணதை' என்றும் சொல்லப்படும்.

## அங்க தீக்கையும் அங்கி தீக்கையும்


மாணுக்கன் : தீக்கைகள், அனைவர்க்கும் ஒருவகையாகவே செய்யப்படுமோ? வேறு வேறு வகையாகச் செய்யப்படுமோ?

ஆசிரியர் : அவரவர் தகுதிக்குத் தக்கபடி வேறு வேறு வகையாகவே தீக்கை செய்யப்படும். அவ்வகைதான் அங்கமும், அங்கியும் என்று இரண்டாகும். அக்கினி காரியத்தால் செய்வது அங்கிதீக்கை. அஃது இல்லாதவை அங்கதீக்கைகளாம். தீக்கை பெற்றபின்னர் சிவநெறி ஒழுக்கத்தை மேற்கொள்ளுதல் இன்றியமையாதது.

## நித்திய நைமித்திக காமிய கன்மங்கள்

அவ்வொழுக்கம் நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்று வகைப்படும். அவற்றுள் நித்தியமாவது, நாள்தோறும் காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று வேளையிலும் நீராடல், திருநீறும், கண்டிகையும் அணிதல், மந்திர நீரைத் தெளித்துக் கொள்ளுதல், மந்திர ஆற்றல்களை நெஞ்சு, முகம், தலை, சிகை, கை, கால் என்னும் உறுப்புக்களில் பதிவித்தல், காற்றினை உடலுள் இருந்து வெளியேற்றி, வெளியில் இருந்து உள்வாங்கி நிரப்புதல் முதலியவற்றால் தூய்மைபெற்றுத் திருவைந்தெழுத்தைக் கணித்தல், ஆலயவழிபாடு அடியார் வழிபாடுகளைச் செய்தல், அகப்பூசை புறப்பூசைகளை இயற்றல், தியானசமாதியில் நிற்றல், உபதேச மொழியைச் சிந்தித்தல், தெளிதல், நிட்டையில் அழுந்தல் என்பனவாம்.

வேலூர் மகாகும்பாபிஷேக விழா :



சிவாசாரியார்கள் சந்தியாவந்தனம் செய்துகொண்டு
வேத சிவாகம பாராயணங்களுடன் யாகசாலைக்கு வருதல்.

வேளூர் மகாகும்பாபிஷேக விழாவில் :



விமான அபிஷேகத்திற்குக் கடங்கள் எழுந்தருளியாகி வலம்வருதல்.

வேளூர் மகாகும்பாபிஷேக விழாவில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு :



வண்ண மின்விளக்குகளால் அலங்கரித்த வெள்ளித்தேர்களில்
பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா வருதல்.

குருபூஜை விழாவில் :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்

நைமித்திகமாவது வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பவற்றுள் ஒன்றிணைதல் பலவற்றிணைதல் சிறப்பெய்தும் நாள் அல்லது பொழுதுகளிலும், மற்றும் அம்பிகை, விநாயகர், முருகர், தேவர், முனிவர், அடியார், மக்கள், அரசர், அசுரர் முதலியோரும், அஃறிணை உயிர்களும் சிவபெருமானது திருவருளைப் பெற்றுச் சிறப்பெய்திய நாள் பொழுது என்பவற்றிலும் சிவபெருமானைச் சிறப்பாகப்பூசித்தலும், விழாக்கொண்டாடுதலுமாம்.

காமியமாவது, நோய் நீக்கம், வாழ்நாள் நீட்டம், மணப்பேறு, மகப்பேறு, வெற்றி முதலிய பயன்கருதி அவ்வப்பயனுக்கு ஏற்றவாறு சிவபெருமானுக்குச் செய்யப்படும் சிறப்பு வழிபாடுகளையும், விழாக்களையும் சில நாளேனும், பல நாட்களேனும் செய்தல்.

இவற்றுள் நித்தியத்தைத் தவிர ஏனைய நைமித்திகமும், காமியமும் பொழுதும், பொருளும், வலியும் வாய்த்துள்ள சிலருக்கன்றி ஏனையோர்க்கு (இளைஞர், பெண்டிர், பல தொழிலில் ஈடுபடுபவர், நோயுற்றோர் முதலியோர்) இயற்றுதல் இயலாது. ஆகவே அவர் அவற்றால் அடையும் பயனை இழந்து உலகில் துன்புறவேண்டியவராவர். அதனால், அவர் அத்துன்பத்திற்கு ஆளாகாதவாறு நித்தியத்தை மாத்திரம் அவர்க்குக் கடனாக நிறுத்தி, ஏனைய இரண்டும் கடனாகாதவாறு தீக்கை செய்யும்பொழுதே நிரப்பியொழித்தல் உண்டு. அவ்வாறு நிரப்பியொழிக்கும் தீக்கை 'நிரதிகார தீக்கை' எனப்படும். நிரப்பாது, நித்தியம், நைமித்திகம், காமியம் என்னும் மூன்றையும் கடனாகவே வைக்கும் தீக்கை 'சாதிகார தீக்கை' எனப்படும். நித்தியகன்மம், நைமித்திககன்மம், காமியகன்மம் என்னும் மூன்றும் தம் பொருட்டாகவும் செய்யப்படும்; பிறர் பொருட்டாகவும் செய்யப்படும். அவற்றுள் நித்தியகன்மம் நோயாலும், பிறவற்றாலும் அதனைச் செய்யமாட்டாது இடர்ப்படுவார் பொருட்டு அவ்விடையூறு நீங்குங்காறும் அவர் பொருட்டுப் பிறரால் செய்யப்படும். ஏனைய இரண்டும் பிறர் பொருட்டுச் செய்யப்படுங்கால் அவற்றை விரும்பிய ஒருவர் பொருட்டும், பொதுவாக உலகத்தின்பொருட்டும் செய்யப்படும்.

ஆசாரியரும் சாதகரும்:

நைமித்திக கன்மங்களையும், காமிய கன்மங்களையும் பிறர் பொருட்டு இயற்றுவோர் 'ஆசாரியர்' என்று சொல்லப்படுவர்.

ஒன்றையும் பிறர்பொருட்டுச் செய்யும் உரிமையின்றித் தம் பொருட்டுச் செய்து சித்தி, புத்தி, முத்தி, என்பவற்றை அடைய முயல்பவர் 'சாதகர்' எனப்படுவர். இவ்விரு திறத்தோர்க்கும் அவ்வதிகாரத்தைக் கொடுத்தற்குச் செய்யப்படும் தனித் தீக்கைவகை 'அபிடேகம்' என்று சொல்லப்படும்.

### உத்தமர் மத்திமர் அதமர்

நித்திய கன்மத்தோடு, நைமித்திக கன்மம், காமிய கன்மம் என்பவற்றையும் கடப்பாடாக இயற்றும் ஆற்றலுடையவர் மக்களுள், 'உத்தமர்' என்றும், அவ்வாற்றல் இல்லாது நித்திய கன்ம மாத்திரமே செய்ய வல்லவர் 'மத்திமர்' என்றும், அதுவும் செய்யமாட்டாதார் 'அதமர்' என்றும் சொல்லப்படுவர். இவருள் முதல் இருவருமே அங்கி தீக்கைக்கு உரியவர். அதமர் எவ்வகை அங்கி தீக்கைக்கும் உரியவரல்லர்; அங்க தீக்கையே அவர்க்கு உரியது. இவ்வல்லமையும், மாட்டாமையும் உண்டா தற்கு ஏதுவாக அமைந்த சூழ்நிலைகளே வருணங்கள் (சாதிகள்) ஆகும்.

### உத்தமருள் உத்தமர் மத்திமர் அதமர் :

நித்திய கன்மத்தோடு, நைமித்திக கன்மம், காமிய கன்மம் என்பவற்றையும் செய்யவல்ல உத்தமருள், வேத சிவாகமங்களை நன்கு ஓதி உணர்ந்து, அவற்றிற் சொல்லப்பட்ட ஒழுக்கங்களை முற்றக் கடைப்பிடித்து ஒழுகவல்லவர் 'உத்தமருள் உத்தமர்' என்றும், வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்தும் அவற்றிற் சொல்லப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க மாட்டாதவரும், அவ்வொழுக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகினும், அவற்றிற்கு மூலமாகிய வேத சிவாகமங்களை ஓதி உணரமாட்டாதவரும் 'உத்தமருள் மத்திமர்' என்றும், வேத சிவாகமங்களை ஓதி உணர வும், அவற்றிற் சொல்லப்பட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும் மாட்டாது நித்திய, நைமித்திக, காமிய கன்மங்களை மட்டும் செய்வோர் 'உத்தமருள் அதமர்' என்றும் சொல்லப்படுவார்கள். இம் மூவரும் சாதிகார தீக்கைக்கு உரியவராவர். இவர் அபிடே கம் பெற்றவராயின், ஆசாரியரும், சாதகரும் ஆவர்.

## நிர்ப்பீஜ தீக்கை சபீஜ தீக்கைகள்

தீக்கையில் உபதேசிக்கப்படும் மந்திரங்களைப் பீஜாக்கரத் தைக் கூட்டி உபதேசித்தலும், கூட்டாது உபதேசித்தலும் என

இருமுறை உண்டு. அவற்றுள் பீஜாக்கரம் இன்றி உபதேசிக்கும் தீக்கை 'நிர்ப்பீஜ தீக்கை' என்றும், பீஜாக்கரத்தோடு உபதேசிக்கும் தீக்கை 'சபீஜ தீக்கை' என்றும் சொல்லப்படும். அபிடேகம் சபீஜமேயன்றி நிர்ப்பீஜம் இல்லையாதலின், ஏனைய சமய விசேட நிருவாண தீக்கைகளே சபீஜம் என்றும், நிர்ப்பீஜம் என்று இருவகைப்படும்.

சாதிகார தீக்கை சபீஜமாகவும், நிரதிகார தீக்கை நிர்ப்பீஜமாகவும் செய்யப்படும் என்பதே சிவாகமநூல் துணிபு. ஆயினும், நிரதிகார தீக்கையையும் சபீஜமாகச் செய்தல் வழக்கத்திற் காணப்படுகின்றது.

## ஞானவதியும் கிரியாவதியும்

இங்ஙனம் சொல்லப்பட்ட முறைகளை எல்லாம் உடையதே அங்கி தீக்கை. அஃது அழல் ஓம்பிச் செய்வதாகிய அக்கினி காரியத்தோடு கூடிநிற்றலால், 'ஔத்திரி தீக்கை' எனப்படும். இது, 'ஞானவதி, கிரியாவதி' என்னும் இருவகைகளுள் ஒருவகையாற் செய்யப்படுதல் இயல்பு. அவற்றுள் ஞானவதியாவது, குண்டம், மண்டலம், வேதிகை, நெய், சுருக்கு, சுருவம் முதலிய அனைத்தையும் மனத்தாற் கருதிக்கொண்டு, அவற்றைக்கொண்டு செய்யப்படும் கிரியைகளையும் மனத்தினாலேயே செய்வது, இது, 'சத்தி தீக்கை' என்றும் சொல்லப்படும். கிரியாவதியாவது, மேற்சொல்லிய அனைத்தையும் புறத்தே அமைத்துக்கொண்டு, கிரியைகளையும் வெளிப்படையாகப் புறத்தே செய்வது; இது 'மாந்திரி தீக்கை' என்றும் சொல்லப்படும்.

## அங்க தீக்கைகள்

மாணாக்கன் : அங்கியாகிய ஔத்திரி தீக்கை பற்றியே கூறினீர்கள் ; அங்க தீக்கைகளாவன எவை ?

ஆசிரியர் : அங்கியாகிய ஔத்திரி தீக்கைக்கு அங்கமாகச் சிறந்தெடுத்துக் கூறப்படுவன, 'நயனம், பரிசம், வாசகம், மானதம், சாத்திரம், யோகம்' என்பன. அவற்றுள் நயன தீக்கையாவது, ஆசாரியன் அங்கநியாச கரநியாசங்களால் தன்னைச் சிவமாகப் பாவித்து அப் பாவனையோடே மாணாக்கனைக் கண்களால் நோக்கி, அந்நோக்கினாலே அவனது கன்மங்களை அழித்தொழிப்பது. பரிசதீக்கையாவது, ஆசாரியன் அவ்வாறு தனது வலக்கையைச் சிவன் கையாகப் பாவித்து மாணாக்கனது சென்னிமேல் வைத்து அவனைச் சிவமாகச்செய்தல். வாசகதீக்கையாவது, மந்திரங்களை ஏற்ற பெற்றியால் உபதேசிப்பது. மானததீக்கையாவது, ஆசாரியன் முன்போலவே தன்னைச் சிவமாகப் பாவித்து

அந்தப் பாவனையோடே மாணாக்கனது ஆன்மாவை உடலினின்றும் பாவனையாற் கொணர்ந்து தனது ஆன்மாவிற் சேர்த்துச் சிவமானதாகப் பாவித்து, மீள அவ்வான்மாவை அவனது உடலிலே சேர்த்தல். சாத்திர தீக்கையாவது, சிவாகமங்களையும், திருமுறைகளையும் ஓதுவித்தல். யோகமாவது ஆசாரியன் மாணாக்களைச் சிவயோகம் பயிலச் செய்தல். இவ்வங்க தீக்கைகள் ஔத்திரி தீக்கைக்கு உரியவர்க்கு அதற்கு அங்கமாகவும், ஔத்திரி தீக்கைக்கு உரியரல்லாதார்க்குத் தனியாகவும் செய்யப்படும். இவை 'சாம்பவி தீக்கை' 'விஞ்ஞான தீக்கை' என்னும்பெயர் உடையன. ஔத்திரிதீக்கை பெறாது அங்கதீக்கை மட்டுமே பெற்றவர், மந்திரங்களைச் சிவாகமமும், திருமுறையும் ஆகிய நூல்வழியாகவே ஓதுதற்குரியர். தனியாகக் கணித்தற்கு உரியரல்லர். கள்ளுண்டல் புலால் உண்டலைச் செய்வோர் சிவாகமம், திருமுறைகளைத் தவிர ஏனைய நூல்களையே ஓதுதற்கு உரியர். அவற்றில் வரும் திருவைந்தெழுத்து முதலியன. ஏனைய எழுத்துக்களோடும், சொல்லோடும் ஒப்பனவன்றி மந்திரங்களாய்ச் சிறந்து நில்லா.

இங்குக் கூறிய நயனம் முதலிய அருவிய சாம்பவ தீக்கை மற்றும் ஔத்திரி தீக்கை ஆகிய அனைத்துத் தீக்கைகளும் நல்லாசிரியரால், நன்மாணாக்கர்க்குச் செய்யப்பட்டவழியே அவற்றுற் பயன் விளையும். பிறரால் செய்தலும், பெறுதலும் உளவாயவழி அவை சடங்கு மாத்திரையாய்ப் போவனவன்றி உண்மையாகா. அவற்றுள்ளும் சமயமும், விசேடமும் ஒருவாறு சடங்கு மாத்திரையால் செய்தலும், பெறுதலும் கூடும்; நிருவாணமும், அபிடேகமும் உண்மையானன்றிச் செய்யலாகா என உணர்க.

'ஆசிரியத் தன்மையை வழங்கும் அபிடேகம் பெறுதற்கு உரியவர் இல்லறத்தவரே' என்றும், 'துறவிகளாயின் இல்லறத்துச் செல்லாமலே துறந்த விரதிகளே உரியர்' என்றும் சிவாகமங்கள் கூறும். இல்லறத்தினின்றும் துறந்தோர் மாணாக்கரை உடையராயின், அவர் தரும் பொருள் முதலியவற்றால் மீளவும் சுற்றத் தொடர்பு உடையராவர். இல்லறத்துச் செல்லாமலே துறவுநிலை அடைந்தோர், அந்நிலையினின்றும் தாழாது நிற்றல் அரிதன்றோ எனின், தாழாது நிற்கும் உறுதியின் றித் தாழ்வடைவராயின், அவரை உலகம் கொள்ளாதாகலின், அவரை மாணாக்கர் அடையார் என்க.

'அபிடேகம் பெறுபவர் இல்லறத்தவராயின் ஆதிசைவ அந்தணராய் இருத்தல் வேண்டும்' என்ற ஒருவிதி காணப்படுகின்றது. இவ்வருணக் குறிப்புப் பற்றி மேலே கூறினோம். (தொடரும்)

( பக்கம் 432-ன் தொடர்ச்சி )

4—6—69 புதன்கிழமை கருத்தரங்கம்,

திருக்கோயில் ஆசிரியர், திரு. ந. ரா. முருகவேள் M. A. M. O. L., அவர்கள் வள்ளுவரும் உமாபதி சிவமும் என்ற தலைப்பில் உரையாற்றுகையில் 'வள்ளுவர் மரபைப் போற்றி அவர் வழிவந்த சமய அறிஞர்களுள் உமாபதி சிவாசாரியார் சிறந்தவர். முப்பால் கூறியதனோடு சொல்லாமற்சொன்ன வீட்டுப்பாலை விரித்துரைத்தவர் உமாபதி சிவம். வள்ளுவர் கையாண்ட யாப்பின்படி குறட்பாவிலேயே தான்பாடிய திருவருட்பயனை அமைத்தவர். முதற்குறளையும் வள்ளுவரின் முதற்குறளுக்கேற்ப "அகர உயிர்போல்" என்று தொடங்குகின்றார் இவ்வாறு குறளின் சொல்லையும் கருத்தையும், தாம் பாடிய பிற நூல்களிலும் எடுத்தாண்டுள்ளார் உமாபதிசிவாசாரியார்' என்ற பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான், தருமையாதீனப் புலவர் சித்தாந்தக்கலைச்செல்வர், திரு. க. வச்சிரவேலுமுதலியார் B. A., L. T., அவர்கள் வள்ளுவரும் அருணந்திசிவமும் என்ற தலைப்பில் பேசும்போது 'திருவள்ளுவர் ஊழ், முயற்சி என்ற இரண்டையும்பற்றிக் கூறுமிடத்தில் அங்கங்கு அதை அதையே பெரிதுபோலக் கூறுகின்றார்; அதனால் முன்னுக்குப்பின் மாறுகக் கூறுகின்றாரோ என்ற ஐயம் உண்டாகின்றது என்று சிலர் கருதுகின்றனர். அவ்வாறு இல்லை என்பதை அருள்நந்தி சிவாசாரியார் தமது சிவஞானசித்தியில் தெளிவுற விளக்குகின்றார். பேறிழவின்பமோடு பிணி மூப்புச் சாக்காடென்னும் – ஆறும் முன் கருவுட்பட்டது. அவ்விதி அனுபவத்தால் ஏறிடும்" என்பது அப்பகுதி. இதனால் ஊழ் நிலத்தின் உள்ளே இருக்கும் நீர்போன்றது, முயற்சி நிலத்தைப்பறித்துத் தண்ணீரைக் காணும் முயற்சிபோன்றது. நிலத்தின் உள்ளே நீர் இல்லையாயின் முயற்சி நாம் கருதிய பயனைத்தராது. இதுபோலத்தான் ஊழும் முயற்சியும் என்று விளக்கினர்,

பனைசைச் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், சிவநெறிச் செல்வர் வித்துவான். திரு. K. M. வேங்கடராமையா M. A., B. O. L. அவர்கள் வள்ளுவரும் உய்யவந்த தேவரும் என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றும்போது இல்லாதது இல்லை 'இதனுள்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற வள்ளுவர் குறளில் திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனர் அளவுகடந்த ஈடுபாடும் மதிப்பும் வைத்திருந்தமையைத் திருக்களிற்றுப்படியாரில் அவர்

ஆளுகின்ற பாடல்களின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம். கருத்துக்களைக் கடன் வாங்குதல் என்பது இலக்கிய உலகிற்கே ஏற்புடைத்தே தவிர உலகியலுக் கொவ்வாதது போல அன்று அச்செயல். பிறவிப்பெருங்கடல் நீந்துதலை வள்ளுவனார் முதல் அதிகாரத்திலேயே வற்புறுத்துகின்றார். நீந்துதல் என்று அவர் குறிப்பிடுவது கடத்தல் என்பதைக்காட்டிலும் 'அறுத்தல்' என்றபொருளுக்குச் சிறப்பாகப் பொருந்துகிறது. பிறவி அறுத்தல் வேறு; ஒழித்தல் வேறு. வள்ளுவனாரின் "பற்றுக பற்றற்றான்" என்ற குறளை நினைவுகொண்டு உய்யவந்த தேவர், "பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து" என்ற வெண்பாவை இயற்றியுள்ளார். இதுபோலவே, "சார் புணர்ந்து சார்புகெட ஒழுகின்" என்ற திருக்களிற்றுப்படியார் பாடல் துறவறஇயலின் மெய்யுணர்தல் அதிகாரத்தில் வருகின்ற சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தாரா சார்தரும நோய்" என்ற குறளின் கருத்தும், சொல்லும் ஒப்ப முடிந்த ஒன்றாகும்' என்ற கருத்துக்களை வெளியிட்டார்கள்.

## 5-6-69 வியாழக்கிழமை கருத்தரங்கம்

5—6—69 வியாழக்கிழமை காலை, தருமையாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 27—5—69 முதல் காலையில் நடைபெற்று வந்த சித்தாந்தப் பாடவகுப்பை நிறைவுசெய்தார்கள் பின்னர், திருச்சி, திருக்குறள்வேள், திரு. G வரதராசப் பிள்ளை அவர்கள் "வள்ளுவரும் கச்சியப்ப முனிவரும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர், வித்துவான். திரு. வை சுந்தரேச வாண்டையார் அவர்கள் "வள்ளுவரும் குமரகுருபரரும்" என்ற தலைப்பில் குமரகுருபரர் எடுத்தாண்ட குறட் கருத்துக்களை எடுத்துக் கூறி விளக்கம் கூறினார்கள். நாகப்பட்டினம், தருமையாதினப் புலவர், வித்துவான், திரு. வை. மு சண்முக தேசிகர் அவர்கள் "வள்ளுவரும் குருஞானசம்பந்தரும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

## 6—6—69 வெள்ளிக்கிழமை கருத்தரங்கம்

தருமையாதீனப் புலவர், திரு. ச தண்டபாணி தேசிகர் அவர்கள் "திருக்குறளும் முத்திநிச்சயமும் என்ற தலைப்பில் விரிவுரையாற்றுபோது, முத்திநிச்சயக் கருத்துக்களுள் திருக்குறட் கருத்து இடம் பெற்ற இடங்களைச் சுட்டி விளக்கிப் பேசினார்கள்.

திருமதி. சோ. பாகீரதி M. A., M. Litt., அவர்கள் "வள்ளுவரும் கம்பரும்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றும்போது, 'பெரிய காப்பியமான கம்பராமாயணம் பலவிடங்களில் ஆழமான குறளுக்கொப்ப அமைந்து காணப்படுகிறது. 'ஊருணிநீர் நிறையவும்' 'பார்கெழு பழுமரம் பழுத்தற்றாகும்' 'பார்மழை பொழியவும், கழனியில் நீர் நிறையவும்' என்ற கம்பராமாயணப் பகுதிகள் "ஊருணி நீர் நிறைந்தற்றே". "பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தற்றால்" என்ற குறள்களுக்குப் பொருந்த அமைந்துள்ளன. 'எந்நன்றி கொன்றார்க்கும்" என்ற குறட் கருத்து, யுத்தகளத்தில் கும்பகர்ணன் விபீடணனைப்பார்த்துப் பேசும்போது எடுத்தாளப்படுகின்றது. "நற்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன், கற்பென்னும் திண்மை ஒன்றே களிநடம்புரியக்கண்டேன்" என்று அனுமான் இராமனிடம் தான் சீதையைக்கண்டதுபற்றிக்கூறும்போது "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப்பெறின்" என்னும் குறட்கருத்து மிளிர்வதைக் காணலாம். வாலி இராமனால் அம்பெய்யப்பட்டு மாய்ந்து கிடக்கும்போது, மனைவி தாரை மறுகி உரைக்கும் கூற்றுக்களில் ஓரிடத்தில், "தருமம் பற்றிய தக்கவர்க்கெலாம் கருமம் கட்டளை என்றல் கட்டதோ?" என்று வரும் வரிகள் அப்படியே பெருமைக்கும் சிறுமைக்கும் "கருமமே கட்டளைக்கல்" என்ற குறளை நினைவு படுத்துகின்றன' என்று குறிப்பிட்டார்கள்.

தருமையாதீனப் புலவர், திரு. ஔவை, சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் "வள்ளுவரும் பட்டினத்தாரும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றும்போது, திருக்குறளுக்கு ஓர் விளக்கமாகவே பட்டினத்தடிகளின் வாழ்வும், அவர் இயற்றிய பாடல்களும் அமைந்துள்ளன என்றுகூறி விளக்கிப் பேசினார்கள். சென்னை, தருமையாதீனப் புலவர் வித்துவான், திரு வை, குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் "வள்ளுவரும் தாயுமானவரும்" என்ற தலைப்பிலும், பொள்ளாச்சி வித்துவான். திரு, கோ. முருகையன் அவர்கள் "வள்ளுவரும் வள்ளலாரும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைக் கல்லூரி முதல்வர், தருமையாதீனப் புலவர், திருமுறைக் கலாநிதி, இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெற்றது. திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நிறைவுற்றது.

உ

தருமையாதீனம்

# வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

# மகாகும்பாபிஷேக விழா நிகழ்ச்சி

**தலச் சிறப்பு :**

தென்னாட்டில் மிகச் சிறந்த பிரார்த்தனைத் தலங்களில் ஒன்றாகத்திகழ்வது புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயிலாகும் தமிழ்மக்கள் பலருக்கும் குலதெய்வமாக இங்குள்ள பெருமான் விளங்குகின்றான்.

இத்தலம் சோழநாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் ஒன்றாக விளங்குவது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோருடைய தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற சிறப்புடையது. பின்னும் பல அருளாளர்களும் இத்தலத் திறைவனைப் பாடல்களால் போற்றியுள்ளார்கள். சடாயு, வேதம், முருகன், சூரியன் ஆகியோர் வழிபட்ட காரணத்தால் 'புள்ளிருக்கு வேளூர்' எனவழங்குவது. இறைவன் உடற்பிணி, உயிர்ப்பிணி போக்கும் மருத்துவனை, மகாவைத்தியநாதனை இத்தலத்தில் எழுந்தருளி அருள் வழங்கிவருகின்றான். "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளவல்லான்" எனத் தேவாரம் கூறுகின்றது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள முருகன் செல்வமுத்துக்குமாரன் என்னும் திருப்பெயரோடு எழுந்தருளிக் கண்கண்ட கடவுளாய் அன்பர்க்கு அருள்வழங்கி வருகின்றான்.

'மெய்கண்ட தெய்வம் இத்தெய்வ மல்லால்
புவியில் வேறில்லை'

என்பார் குமரகுருபரர். தையல்நாயகியம்மை இத்தலத்தின் தனிச் சிறப்புக்குரிய தெய்வமாகும். இத்தலத்துக்கு வரும் அன்பர்கள் செலுத்தும் காணிக்கைகள் அனைத்தையும் அம்மையும் அப்பனும் ஏற்று அருள்புரிந்துவருகின்றனர். இத்தலத்துக் கோயிலில் உள்ள சித்தாமிர்தத் தீர்த்தம் மிக்க சிறப்புடையது. இத்தீர்த்தக் குறுந்திவலையொன்றே பல பிணிகளையும் நீக்க வல்லது. இத்தலத்தில் பெருமானுக்குச் சார்த்தி வழங்கப்படும்

நேத்திரப்பிடி சந்தனம், திருச்சாந்துருண்டை முதலியன அன்பர்களுக்கு அருமருந்தாய் உதவுவன. நவக்கிரகங்களில் அங்காரகன் வழிபட்ட சிறப்புக்குரியது இத்தலம். இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புடைய இத்திருத் தலம் தருமையாதீனத்தின் 27 திருக்கோயில்களில் ஒன்றாக விளங்குவது.

## திருப்பணி :

சுவாமி விமானம் எடுத்துக்கட்டியும், சோமாஸ்கந்தருக்கும் சண்டிகேஸ்வரருக்கும் புதிதாக விமானங்கள் எழுப்பியும், சுவாமி சந்நிதி, அம்பாள் சந்நிதி, சோமாஸ்கந்தர் சந்நிதி, ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி சந்தனக்குழம்பு மண்டபம், முன்புறம் இவற்றில் மேலே சித்திரப் பூவேலை செய்தும், அம்பாள் திருச் சுற்றில் ஐதிகச் சித்திரங்கள் எழுதியும், இராஜகோபுரங்கள் ஐந்தையும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி கோபுரத் தையும் பழுதுபார்த்துப் புதுப்பித்தும், கற்பகவிநாயகர், ஆறுமுகக்குமாரர், தையல்நாயகி, ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி நடராஜர், ஆவுடையம்மன், தண்டபாணி முதலிய மூர்த்திகளின் விமானங்களைப் புதுப்பித்து வர்ணம்வைத்தும், வேம்படிமால், பிராகாரங்கள், சண்முகவிலாச பிரசாரமண்டபம், சுவாமி சந்நிதி வெளிக்கொட்டகை அடியிடம் முதலியவற்றில் கருங்கல் தளவரிசையிட்டும், சித்தாமிர்தத் தீர்த்தத்தின் படி களைப் பெரிதாக்கிக் கருங்கல் படி அமைத்தும், அடித்தளம் தள வரிசை இட்டு, மக்கள் தவறி விழுந்து விடாமல் கம்பி நட்டும், அத்தீர்த்தத்தின் நடுவில் உள்ள மண்டபத்தைப் புதுப்பித்தும் சுற்றுமண்டபம் கைப்பிடிகள் திருத்தி வர்ணம் வைத்தும், தளங்கள் வெள்ளைவைத்தும், வெளிமதில் வடபுறம், கீழ்ப்புறம் புதிதாக எழுப்பியும், கோயிலில் விழும் மழைத்தண்ணீர் வெளியேபோக வடிகால் அமைத்துக் கட்டியும், சண்முகவிலாச பிரசார சபை, ஆறுமுகக்குமாரர் சந்நிதி மண்டபங்களில் பாவு கல் உடைத்திருந்த இடங்களில் புதிதாகப் போட்டுக் கட்டியும், காரியாலயம், நெற்களஞ்சியம், பரிமாத்தம் அறை, பசுமடம் இவைகளைப் புதிதாகக் கட்டியும், வாகன மண்டபமும், யாத்திரீ கர்கள் தங்கும் விடுதிகளும், சித்தவைத்தியசாலையும், மூலிகைத் தோட்டமும், தாய் தந்தையற்ற இந்துக் குழந்தைகளுக்கு ஸ்ரீ தையல்நாயகி அன்பில்லமும், உள்ளூர் உயர்நிலைப்பள்ளியில் பிரார்த்தனை மண்டபமும், கோயில் பணியாளர்களுக்கு வீடு களும் கட்டியும், கீழைக்கோபுரம் முன்பும் யாகசாலை முன்பும் வழிபடுவோர் வசதிக்காகக் கொட்டகைகள் அமைத்தும், கோயில்

முழுவதும் பழுதுபார்த்துப் புதுக்கியும், வினைதீர்த்த விநாயகர், தெற்குவீதி விநாயகர், கோதண்ட தீர்த்த விநாயகர் கோவில்களை அடியிலிருந்து புதிதாகக் கட்டியும் மற்றைய புறக்கோயில்களைப் பழுதுபார்த்தும், திருப்பணிகள் செய்தும், ஸ்ரீவைத்தியநாதர், ஸ்ரீதையல்நாயகி, ஸ்ரீகற்பகவிநாயகர், ஸ்ரீ ஆறுமுகக்குமாரர், ஸ்ரீ வள்ளி தேவசேனை ஆகிய மூர்த்திகளுக்குத் தங்கக் கவசங்கள் செய்து சாத்தியும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு நவரத்தின கவசமும், தெய்வயானைக்கு இரத்தின கவசமும், வள்ளிக்கு மரகதக்கவசமும், ஆறுமுகக்குமாரருக்குக் கல்லிழைத்த வேலும் செய்து சாத்தியும், குடவறை விநாயகர், வலம்புரி விநாயகர், பழனியாண்டவர், அங்காரகன் மூலஸ்தானம், உத்சவர், துர்க்கை, தக்ஷிணாமூர்த்தி, சுவாமிசந்நிதி நந்தி, பலிபீடம், கண்ணாடி, ஆறுமுகக்குமாரர் சந்நிதி மயில் பலிபீடம் இவற்றிற்கு வெள்ளிக் கவசம்செய்து சாத்தியும், மற்றும் அபிஷேகம் முதலிய வழிபாட்டுக் காலங்களில் பயன்படும் பாத்திரங்கள் உபசாரப் பொருள்கள் இவற்றை வெள்ளியிலும் தங்கத்திலும் செய்தும், திருவாபரணங்களைப் பழுதுபார்த்துப் புதுக்கியும், சுவாமி, அம்பாள், செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி நிலை, படிகள், கதவுகளுக்கு வெள்ளி வேய்ந்தும், துவஜஸ்தம்பத்திற்குப் புதிய மரம் அமைத்துத் தங்கத்தகடு இட்டும் விமான கலசங்களுக்குத் தங்கத்தகடு வேய்ந்தும், செல்வமுத்துக்குமார சுவாமிக்கு வெள்ளிமேல் தங்க முலாமிட்ட மயில் வாகனம், கண்ணாடி மயில் வாகனம், எழுந்தருள வெள்ளி மஞ்சம், யதாஸ்தானத்தில் வெள்ளியில் ஆறுபட்டை மஞ்சம், பார்வைத்தகடு உத்சவ அங்காரகனுக்கு வெள்ளியில் மஞ்சம் இவை செய்தும், பக்தர்களுக்கு வழிபாடு முதலியன செய்யப் பல வசதிகளும் செய்து கொடுத்தும், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கியும், குடிதண்ணீர் வசதி செய்தும் பல திருப்பணிகள் நிறைவேறியுள்ளன.

ஆறுமுகர், அம்பாள், சுவாமி, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர், சோமாஸ்கந்தர் சந்நிதிகளிலுள்ள படிக்கட்டுகள் பித்தளைத் தகடுகள் வேய்ந்து வனப்புறுத்தப்பெற்றன.

வேளூரைச் சூழ உள்ள புறக்கோயில்கள், கிராம தேவதைக் கோயில்கள் அனைத்தும் பழுதுபார்த்து வர்ணம் வைத்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றன. மேல நந்தவனம், வடக்குப் பழத் தோட்டம், சந்நிதிக் கதவுகள், மற்றும் வாயிற் கதவுகள் அனைத்தும் பழுதுபார்த்தும், புதுக்கியும் திருத்தம் செய்யப்பெற்றன.

தருமையாதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இத்திருக்கோயிலை மிகச் சிறந்த முறையில் திருப் பணிகள் செய்வித்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருவுளம் கொண்டார்கள். நீண்டகாலத் திட்டமிட்டு ஆண்டுதோறும் பல திருப்பணிகளைத் தொடர்ந்து செய்விக்க ஆணையிட்டார்கள்.

பல ஆண்டுகளாகவே திருப்பணிகள் பலவும் தொடங்கப் பெற்று செய்விக்கப்பெற்றுவந்தன.

## புதிய விமானங்களும் சிற்பங்களும் :

சுவாமி விமானம், சோமாஸ்கந்தர் விமானம், சண்டிகேசுரர் விமானம், அங்காரகன் மூலவர் விமானம் முதலியனவற்றை மேலும் புதிதாக உயர்த்திக் கட்டிச் சுதைச் சிற்பங்கள் அமைத்து வண்ணம் தீட்டி அழகுறுத்தியுள்ளார்கள். வள்ளித் திருமணம், தெய்வயானைத் திருமணம், தல ஐதிகம் முதலியவற்றை விளக்கும் சுதைச் சிற்பங்கள் மண்டபங்களில் புதிதாக அமைக்கப்பெற்றுள் ளன. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கோபுரத்தில் கந்த புராணச் சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. ஸ்ரீ தண்டபாணிச் சுதைச் சிற்பமும், அருணகிரியார் வல்லாளர் அருள் பெற்ற வரலாறும அழகோவியங்களாக அமைக்கப்பெற் றுள்ளன. பதினறுகால் மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளின் சுதைச் சிற்பங்கள் நிறுவப்பெறுகின்றன.

## புதுக் கோயில்கள் :

கோதண்ட தீர்த்தக்கரை விநாயகர் கோயிலும், வினைதீர்த்த விநாயகர் கோயிலும் புதிதாக எழுப்பிக் கட்டி வண்ணம வைத்து மகாகும்பாபிஷேகங்கள் செய்விககப்பெற்றுள்ளன.

இவ்வாறு பல ஆண்டுகளாகத் தொடர்ந்து திருப் பணிகள்செய்து கும்பாபிஷேகத்தையொட்டி இராஜகோபுரங்கள் ஐந்தும் பழுதுபார்த்துப் புதிய சுதைச்சிற்பங்கள் அமைத்துக் கணேணக கவரும வண்ணஙகள் தீட்டப்பட்டன. சுவாமி, அம்பாள், செல்வமுத்துக்குமாரர், நடராசர், ஆவுடையம்மன், ஆறுமுகக்குமாரர் தண்டபாணி முதலிய மூர்த்திகளின் விமானங் கள் புதுப்பித்து வண்ணம தீட்டப்பட்டன. பிரகாரங்கள் அனைத்தும் கருங்கல் தளவரிசை இடப்பட்டன சித்தாமிர்த தீர்த்தத்தின் படிகள் பெரிதாகக் கட்டப்பட்டன. இவ்வாறு எல்லாவகையான திருப்பணிகளையும் நிறைவுறச் செய்வித்து

மகாகும்பாபிஷேக விழாவை மிகச்சிறப்பாக நிகழ்த்த நல்லநாள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சௌமிய ஆண்டு, ஆனித்திங்கள், 18 ஆம் நாள் (2—7—'69) புதன்கிழமை காலை 9-30 மணிக்கு மகாகும்பாபிஷேகம் செய்விப்பதென நாள் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

## சமயப் பிரசார நிலையம் :

சென்னையில் இத் தேவஸ்தானத்தின் சார்பில் தியாகராய நகரில் நிலையம் ஒன்றை வாங்கி தலைநகரின்கண் சமயப்பணி புரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. நிலையத்தின் தென் புறம் அரங்கு அமைத்து சிறப்பு விழாக்கள் கார்த்திகைப் பிரசாதம் வழங்கும் விழா முதலியன செய்யப்பட்டு வருகின்றன.

## திருவாபரணங்கள் :

ஸ்ரீ கற்பக விநாயகர், ஸ்ரீ தையல்நாயகியம்மை, ஸ்ரீ வைத்தியநாதர், ஸ்ரீ ஆறுமுகக்குமாரர் ஆகிய மூர்த்திகளுக்குத் தங்கக் கவசங்களும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு நவரத்ன கவசமும் பெரும் பொருட்செலவில் செய்விக்கப் பெற்றன. சுவாமி, அம்பாள், முத்துக்குமரர் சந்நிதிகளுக்கு வெள்ளியினால் நிலைக்கதவுகள் செய்விக்கப்பெற்றன. அங்காரகர்க்கு வெள்ளி விமானம் செய்யப்பெற்றது. கொடிமரம் தங்கத்தினால் வேயப்பெற்றது. தங்கக் குடங்கள் கலசங்கள் தட்டுகள் சகஸ்ரதாரைகள் திருவாபரணங்கள் மற்றும் பூஜாபாத்திரங்கள் பலவும் நீண்டகாலத் திட்டமாகச் செய்விக்கப்பெற்றன.

## பொதுப்பணி :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாட்சிக்காலத்தில் வேளூரில் பொதுமக்களுக்கு மிகவும் பயன்தரும் திட்டங்கள் பலவற்றையும் நிறைவேற்றியருளியுள்ளார்கள். பொது மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து தரப்பெற்றுள்ளது. சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படும் பால், குழந்தைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. பள்ளிகளில் பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. ஆதரவற்ற இந்துக்குழந்தைகளுக்குத் தையலுயகி அன்பில்லம் வைத்து, தொழிற்கல்வி பள்ளிக்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. இலவச சித்த மருத்துவ வைத்தியசாலை வைத்து சிறந்த மருத்துவரை நியமித்து மருத்துவ உதவி செய்யப்பெற்று வருகிறது. தேவஸ்தானத்தின் ஆதரவில் தருமையாதீனத்தில் வேத

சிவாகம தேவாரப்பாடசாலை வைத்து நடத்தப்பட்டு வருகிறது. மாலை நேரத்தில் தேவஸ்தான ஓதுவா மூர்த்திகளைக்கொண்டு திருமுறை வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. திருக்கோயிலில் வந்து பயில்வோர்க்கு வசதியாக சமய நூல்கள், பொது நூல்கள் நிரம்பிய நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சேவார்த்திகள் தங்கி சுவாமி தரிசனம் செய்வதற்கு வசதியாகக் குறைந்த வாடகையில் விடுதிகள் கட்டப்பெற்றுள்ளன. பெரியன 2, நடுத்தரம் 4, சிறியன 8, ஆக 14 விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. தேவஸ்தான பிரசாதங்கள் இலவசமாகவும், குறைந்த விலையிலும் வழங்கப்படுகிறது. ஊர்க்குளங்களை வெட்டித் திருத்தி படிகட்டி வசதி செய்யப்பட்டுள்ளது. கடுங்கோடையிலும் தொலைவிலிருந்து திருக்குளத்திற்கும், ஊர்க்குளங்களுக்கும் பெருஞ்செலவில் தண்ணீர் கொண்டுவந்து, குளங்கள் நிரப்பப் படுகிறது. தென்னை முதலிய தோட்டங்கள் பயிரிடப்படுகின்றன. சுமார் ஐம்பது ஏக்கர் மூலிகைத் தோட்டம் அமைத்து சிறந்த மூலிகைகள் பயிரிடப்படுகின்றன. பணியாளர்களுக்கு பதினான்கு வீடுகள் கட்டித்தரப்பெற்றுள்ளன. கோயில் நாடோறும் தூய்மையாக பேணப்பட்டு வருகிறது. நித்ய திருப்பணிகள் என்று அச்சிட்டு அலுவலகத்தில் தொங்கவிட்டு அதன்படி கோயில் காரியங்கள் பேணப்பட்டு வருகிறது. உயர்தரப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தரப்பட்டிருக்கிறது. யாத்ரீகர்கள் வசதிக்கு ரயில்நிலையத்திலிருந்து ஆலயத்திற்கு நேராக சாலை போடப்பட்டிருக்கிறது.

### மகாநாடுகள் :

வேளூர் தேவஸ்தானச் சார்பில் வெளிப்பிரகாரத்தில் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் என்ற பெயரில் ஆஸ்பெஸ்டாஸ் தகடு வேய்ந்த நிரந்தர கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. திருவிழாக் காலங்களில் திருமுறை மாநாடுகளும், சமயச் சொற்பொழிவுகளும் மார்கழி மாதத்தில் பாவை மாநாடும் இங்கு நடத்தப்படுகிறது.

### மாதக் கார்த்திகை விழா :

மாதந்தோறும் ஸ்ரீ செல்வ முத்துக்குமரப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழும். பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து தரிசித்து மகிழ்வர். தரிசனம் செய்ய வரும் அன்பர்களுக்கு வசதியாக அனுமதிச்சீட்டு முறை வகுக்கப்பட்டுள்ளது. சந்தனக்குழம்பு எல்லோருக்கும் கிடைக்க வசதியாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் வரும்

கார்த்திகை நாட்களில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு அபிஷேகம்செய்ய விரும்புகின்றவர்களுக்கு வாய்ப்பாக ரூ. 1000 கட்டணம் செலுத்தி அபிஷேகம் செய்து தரிசிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வேளூர்த்திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் இனிதே நிறைவேறுவதற்குத் தொடக்க விழாவாக வேளூரின் தென்மேற்கு மூலையில் உள்ள கோதண்ட தீர்த்தக்கரை விநாயகர் திருக்கோயிலை அடிமுதல் எடுத்து உயர்த்திக்கட்டித் திருப்பணிகள் செய்வித்துச் சிறந்தமுறையில் மகாகும்பாபிஷேகத்தை நிகழ்த்தினார்கள். பின் நிகழ இருக்கும் பெரிய கும்பாபிஷேகத்திற்கு முதல் வழிபாடாக இவ்விழா நிகழ்ந்தது.

### முன்னேற்பாடுகள் :

ஸ்ரீ வைத்தியநாதர், ஸ்ரீ முத்துக்குமாரசாமி, ஸ்ரீ தையல் நாயகி ஆகிய மூர்த்திகளுக்கு நவகுண்ட பட்ச யாகங்கள் நிகழ்த்துவது என்று விரிவான யாகசாலைத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. கோயிலின் வடக்குவெளிப் பிராகாரத்தைத் திருத்தம் செய்து யாகசாலைப்பந்தல்கள் கொட்டகைகள் போடப்பெற்றன.

மேற்கு இராஜகோபுரத்தின் முன்னால் சிறந்த முறையில் பந்தல்கள் அமைத்து கோபுர அமைப்பில் கிற்று வேலைப்பாடுக ளுடன் முகப்புகள் கட்டி அழகுறுத்தப் பெற்றன. கீழைக்கோபுர வாயிலில் பெரிய பந்தல்கள் போடப்பட்டு முகப்பு வேலைப்பாடு கள் செய்யப்பெற்றன. மிகச்சிறந்த முறையில் மின்விளக்கலங் காரங்கள் செய்விக்கப் பெற்றன. கட்டளை மடத்தின் பின்னால் அடியார்கள், பணியாளர்கள் அமுதுண்ண கொட்டகைகளும் பந்தல்களும் அமைக்கப்பெற்றன: பிராமண போஜனம், சிவாச் சாரியார்கள் போஜனம், திருமுறையாளர்கள், அடியார்கள் உணவருந்துமிடம் எனத் தனித்தனியாக உணவிடங்கள் வகுக் கப்பட்டன. இவ்வாறு முன்னேற்பாடுகள் பலவும் திட்டமிட்டு மிக நல்லமுறையில் செய்விக்கப் பெற்றன. எல்லா இடங்களி லும் தேவையான வசதிகள் அனைத்தும் செய்யப்பெற்றன.

மகாகும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகளைச் செவ்வியமுறையில் நடத்த ஆதீனத் திருமடத்துக் காரியஸ்தர்களும் தேவஸ்தான

சிப்பந்திகளும் 25 பிரிவுகளாக நியமிக்கப்பெற்றனர். மகா கும்பாபிஷேக வேலை நியமன விபரம் அச்சிட்டு வழங்கப் பெற்றது.

தேவஸ்தானச் சிப்பந்திகள், பணியாளர்கள், ஆதீனத் திருமடத்துக் காரியஸ்தர்கள், பணியாளர்கள், யாகசாலையில் பங்குகொள்ளும் சிவாசாரியர்கள் திருமுறை இசைவாணர்கள் புலவர்கள் ஆகியோருக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் புத்தாடைகள் வழங்கினர்கள்.

கும்பாபிஷேக விழாக் காணவரும் லக்ஷக்கணக்கான மக்களின் வசதிக்காகத் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வைத்தீஸ்வரன்கோயிலுக்கு ஸ்பெஷல் ரயில்களும், பஸ்களும் விட ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. திருச்சி டிவிஷனல் சூப்பரின்டென்ட் திரு. இராகவன் அவர்கள் சிறப்பான முறையில் ரயில் வசதிகளைச்செய்து தந்தார்கள். குடி தண்ணீர் வசதிகள் உணவுப் பொட்டண வசதிகளையும் செய்து தந்தார்கள். தஞ்சை மாவட்டம் ரீஜனல் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரி திரு. கருப்பண்ணன் அவர்களும் தஞ்சைமாவட்ட கலெக்டர் திரு. அந்தோனி அவர்களும், மாயூரம் R. D. O. அவர்களும் போக்குவரவிற்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரப் பெரிதும் உதவினர்கள். ஏறத்தாழ 5 லக்ஷம் மக்கள் கும்பாபிஷேகதரிசனம் செய்யவரக்கூடும் என்று திட்டமிடப்பட்டு அதற்கான வசதிகளைச் செய்யத் தமிழக அரசின் அனைத்துத்துறை அதிகாரிகளும் வைத்தீஸ்வரன்கோயிலுக்கு வந்து வசதிகள் அனைத்தும் செய்துதவினர். முதலுதவி ஸ்தாபனத்தினராகிய செயின்ட்ஜான் தனி அலுவலகம் அமைத்து ஆம்புலன்ஸ் ஏற்பாடுகள் செய்து தந்தனர்.

**காவல் துறை:**

தஞ்சை மாவட்டம் காவல்துறையின் மேல் அலுவலர் திரு. சுப்பராயன் அவர்கள் காவல்துறையினரின் முழு ஒத்துழைப்பும் தருவதாகத் 900 காவல் துறையினரை வைத்தீஸ்வரன்கோயிலுக்கு அனுப்பியுதவினர். போலீஸ் பணிகளுக்குத் தனி அலுவலகங்கள், தங்குமிடங்கள், உணவு வசதிகள் செய்யப்பெற்றன. Dy.S.P. திரு. S. P. குருசுவாமி அவர்கள் கும்பாபிஷேகநாட்களில் உடனிருந்து தங்கள் துறையினரின் பணிகளைச்செவ்வனே செய்ய ஆவன செய்தார்கள். சாரணர்கள் பல ஊர்களிலிருந்து சிறந்த முறையில் கூட்டத்தைக் கட்டுப்படுத்திப் பொதுமக்களுக்கு

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

உதவினர். பாரத் சாரணர் படையினர் 150 பேர் காட்டுமன்னார் குடி சின்னப்பண்ணை திரு. M. R. இரத்தினம் அவர்கள் தலைமையில் பணி செய்தனர்.

**செய்திச்சுருள் :**

நாடுமுழுதும் இவ்விழாவைக் கண்டுகளிக்கும் வகையில் செய்திச்சுருள் எடுக்கப்பட்டது. அகில இந்திய படக்காட்சித் துறையினரும் சென்னை செய்தித் தொகுப்பு ஸ்தாபனத்தினரும் மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகளைத் தொகுப்பாகப் படமெடுத்தனர்.

**வானொலியில் வேளூர்ச் சிறப்பு :**

சென்னை, திருச்சி வானொலி நிலயத்தினர் வேளூர் கும்பாபிஷேக விழாவையொட்டி 1—7—69 அன்று ஒலிச்சித்திரங்களும் 2—7—69 அன்று நேர்முக வர்ணனைகளும் மிகச்சிறப்பாக நடத்தினர். நேரே கண்டுகளிப்பது போன்ற உணர்வையும் உவகையையும் அன்பர்கட்கு இந்நிகழ்ச்சிகள் விளைத்தன.

**அனுமதிச்சீட்டு :**

மகாகும்பாபிஷேகப் புனிதப் பணி திருக்கோயில் திருப்பணிகளில் பொதுமக்களும் கலந்துகொண்டு திருவருட்பேற்றுக்கு உரியவர்களாகும் வகையில் அனுமதிச்சீட்டு முறைகள் வைக்கப் பட்டிருந்தன. சுவாமி மண்டபம் மேல்தளம், அம்பாள் கோயில் மேல்தளம் இவற்றில் ஐந்துபேரும் மூன்றுபேருமாக இருந்து மகாகும்பாபிஷேக தரிசனம் செய்ய முறையே நூறுரூபாய், ஐம்பதுரூபாய் அளவில் ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர், ஸ்ரீ தையல்நாயகி ஆகிய மூர்த்திகளின் திருஉருவங்கள் அமைந்த அழகிய மூவண்ண அனுமதிச் சீட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன. சண்முக விலாச பிரசார மண்டபம், தீர்த்தக்கரை மண்டபம், திருமாளிகைப்பத்தி மேல் தளங்களில் இருந்து தரிசனம்செய்ய ஐந்துரூபாய் அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டன. பிராகாரங்கள் சித்தாமிர்தத் தீர்த்தக்கரைகளில் இருந்து தரிசனம்செய்ய இரண்டுரூபாய் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், ஜன நெரிசலைத் தவிர்க்கவும் இவை பெரிதும் உதவின. பொதுமக்கள் பலரும் திருப்பணிக்குதவும் இவ்வனுமதிச்சீட்டுகளைப் பெற்றுப் பயனுற்றனர்.

யாகசாலை தரிசனம் செய்ய வருவோர் முன்னால் இருந்து வசதியாகத் தரிசனம் செய்ய நாளொன்றுக்கு ரூ. 2 விதம் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. 100 ரூபாய் டிக்கெட்டு களுக்கு ஐவரும் 50 ரூபாய் டிக்கெட்டுகளுக்கு மூவரும் அனுமதிக் கப்பட்டனர்.

**யாகசாலை :**

வடக்கு வெளிப்பிராகாரத்தில் யாகசாலை கிழக்கு நோக்கி அமைக்கப்பெற்றிருந்தது. சிறந்த முறையில் வேலைப்பாடுக ளுடன் கவின் பெறக்காட்சியளித்தது யாகசாலை. பல்வண்ண மின் விளக்குகளால் அழகுறுத்தப் பெற்றிருந்தது. முன்னால் ஸ்ரீ வைத்தியநாதர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர் ஸ்ரீ தையல்நாயகி ஆகிய மூர்த்திகட்குரிய கடங்கள் எழுந்தருளச்செய்த யாகசாலை விளங்கியது. பின்னால் பரிவார தெய்வங்கள், இராஜகோபுரங் கள் விமானங்களுக்குரிய யாகசாலைகள் விளங்கின. எதிரில் பூநீர் ஊற்று அமைத்து ஒளிவிளக்குகளுடனும் பூந்தொட்டி களுடனும் விளங்கியது யாகசாலை.

25—6—69 புதன்கிழமை காலை தனபூஜை அனுக்ஞை. விநாயகர் பூஜை முதலியன நடைபெற்றன. 26-6-69 வியாழன் காலை நவக்கிரக ஹோமம். அங்குரார்ப்பணம் முதலியன நடை பெற்றன. 27—6—69 வெள்ளிக்கிழமை இரவு 6-மணிக்கு எல்லா மூர்த்திகளும் கலாகர்ஷணம் செய்யப்பெற்று யாகசாலைக்கு எழுந்தருளச்செய்து பூசைகள் தொடங்கப்பெற்றன. 27-6-69 மாலை முதல 2-7-69 காலை முடிய யாக பூஜைகள் நிகழ்ந்தன. 120 சிவாச் சாரியார்கள்யாக பூஜையில் பங்குகொண்டனர். 50 சாஸ்திரிகள் வேதபாராயணம் நிகழ்த்தினர் ஒவ்வொருகாலதரிசனமும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. விரிவான திருமுறைப்பாராயணங்கள் நடைபெற்றன. தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 108 ஓதுவாமூர்த்திகள் தக்க பக்க வாத்தியங்களுடன் திருமுறைப் பாராயணம் செய்தனர். பன்னிரு திருமுறை, பன்னிரு திருமுறை பண்ணிசைப் பாராயணம், பன்னிரு திருமுறை அகண்ட பாராயணம், வேளூர்த் தலப்பதிகப் பாராயணம் நன்கு நடை பெற்றன. யாகசாலையில் சிறந்த மேளவாத்திய இன்னிசையும், கிளாரினெட் இன்னிசையும் திருச்செந்தூர் இசையும் பூஜா வேளைகளில் நடைபெற்றன. யாகசாலை நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலிபெருக்கிகள் மூலம் திருக்கோயில் முழுவதும் ஒலிபரப்பப் பெற்றன.

**பரிவார கும்பாபிஷேகம் :**

வேளூர்த் தலத்திலுள்ள சுற்றுக்கோயில்கள் அனைத்தும் நன்கு திருப்பணிகள் செய்யப்பெற்றன. மூர்த்திகளுக்கு அஷ்ட பந்தனம் சார்த்தப்பட்டது. கோயில்களில் உள்ள பரிவார மூர்த்திகள் எல்லாவற்றிற்கும் அஷ்டபந்தனம் சார்த்தப் பெற்றது. முக்கிய மூர்த்திகளாய் உள்ள கற்பக விநாயகர், சுவாமி, அம்பாள், செல்வமுத்துக்குமாரர், நடராஜர், சோமாஸ் கந்தர் ஆகிய மூர்த்திகள் தவிர ஏனைய எல்லா மூர்த்திகளுக்கும் 29—6—69 அன்று மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது.



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியை
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபடுதல்

# கண்ணகி வழக்குரை

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip.Ling.

## பத்தினிக்கடவுள்

'கொங்கச் செல்வி' என்றும், 'குடமலையாட்டி' என்றும், 'தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து' என்றும், 'ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணி' என்றும் இளங்கோவடிகளால் ஏத்தப்பெறும் பத்தினிக்கடவுள் கண்ணகி. கண்ணகிக்குச் செங்குட்டுவன் கட்டியது கற்கோயில்; இளங்கோவடிகள் கட்டியது சொற்கோயில். இளங்கோவடிகளின் சொற்கோயிலை ஒட்டித் தமிழகத்தும் ஈழத்தும் எழுந்த இலக்கியங்கள் பல. கண்ணகி வழிபாடு என்ற புதிய சமயம் தமிழ்கூறு நல்உலகில் கால்கொள்ளக் காரணமாயினர் பலராவர். இலக்கியத் தரம் குன்றாத பனுவல்கள் பல எழுந்தன. நாடுகள் தோறும் பத்தினி வழிபாடு பெருகிச் செழிக்கலாயிற்று. 'நம் அகநாடடைந்த இப் பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என்று செங்குட்டுவன் முடிவெடுத்துக் கண்ணகிக்குக் கோயில் கட்டி நிறுவிய பெரும்புகழை உலகு உணரலாயிற்று. செங்குட்டுவன் காலத்துக்குப்பின் தமிழகத்தில் கண்ணகி வழிபாடு ஆடித் திங்கள் தோறும் மாரிவிழாவாகக் கொண்டாடப் பெற்றது என்கின்றது சிலப்பதிகார உரைபெறு கட்டுரை.

## ஈழத்தில்

சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு 'பத்தினி தெய்யோ' வழிபாடாகப் பெருவழக்காகப் பயின்று வருகின்றது. கயவாகு மன்னன் காலத்திலிருந்து ஆடிமாதப் பூரணை தோறும் 'பெரகரா' என்னும் பெயருடன் இவ்விழா கண்டி மாநகரில் நடைபெற்று வருகின்றது. கண்டியிலுள்ள தாலதா மாளிகையில் கண்ணகிக்குக் கோயில் உள்ளது. இங்குள்ள கண்ணகி உருவம் சந்தனக் கட்டையால் ஆகியது ஆகும்.

கண்ணகிப் பூசனை

ஈழத் தமிழகத்தின் ஒருபகுதி மட்டக்களப்பு. இங்குப் பல இடங்களில் கண்ணகி கோயில்கள் உள்ளன. வைகாசிப் பூரணைக்கு முன் வரும் ஏழெட்டு நாட்களுக்கு முன்பிருந்தே கண்ணகி கோயில்களின் 'கதவு திறத்தல்' விழா தொடங்கி விடும்.

கதவு திறத்தல் விழாவிற்குப்பின் ஒவ்வொருநாளும் நண் பகலிலும் இரவிலும் 'சடங்கு' நடைபெறும். நிறைவுநாளில் தீமிதித்துக் குளுத்திபாடி முடித்ததும் மீண்டும் கதவுகள் மூடப் பெறும். கண்ணகியம்மன் கோயில்களில் இவ்வாறு சடங்குக் காலத்தை விட ஏனைய நாட்களில் நாட்பூசைகள் நடத்தப் பெறுமை நீண்டநாள் மரபாக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. காரைத்தீவுக் கண்ணகி யம்மன் கோயில், மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த குளக்கட்டுக் கண்ணகி யம்மன் கோயில், சித்தாண்டிக்குடிவயங்கரையைச் சேர்ந்த கண்ணகி அம்மன் கோயில், சேனையூர்க் கண்ணகியம்மன் கோயில், துறைநிலாவணைக் கண்ணகியம்மன் கோயில், செட்டிப் பாளையம் கண்ணகியம்மன் கோயில், ஆரைப்பற்றைக் கண்ணகி யம்மன் கோயில் முதலிய எல்லாக் கோயில்களிலும் இவ்வாறே நிகழ்ந்து வருகின்றது.

## கண்ணகி வழக்குரைக் காப்பிய அமைப்பு :

கண்ணகியின் புகழ் விரித்து மட்டக்களப்பிற் பாடப்பெறும் பாடல்கள் குளுத்திப் பாடல்கள், கொம்பு விளையாட்டுப் பாடல் கள், வசந்தன் கவிகள், உடுக்குச்சிந்து முதலியனவாம். இவை யனைத்திலும் புகழ்பெற்றது 'கண்ணகி வழக்குரை' என்பது ஆகும். கண்ணகி கூறிய வழக்குரைப்பகுதியைச் சிறப்புறக்கூறி, மதுரையைத் தீக்கு இரையாக்கியதுடன் இக்காப்பியம் நிறைவு பெறுகின்றது. இக்காப்பியத்தின் உட்பகுதிகள் பின் வருமாறு :

1. வரம் பெறு காதை: கோவலனார் பிறந்தகதை, அம்மன் பிறந்த கதை.
2. கப்பல் வைத்த காதை: மீகாமன் கதை, துரியோட்டு, கப்பல் வைத்தல்.

3. கடலோட்டு காதை: வெடியரசன் போர் ... புலம்பலும் வீரநாரணன் கதையும் மணி... கதை, விளங்குதேவன் போர்.

4. கலியாணக் காதை.

5. மாதவி அரங்கேற்று கதை.

6. பொன்னுக்கு மறிப்புக் காதை: பொன்னுக்கு மறிப்பு, இரங்கிய காதல்.

7. வழிநடைக் காதை: வயந்தமாலை தூது, வழிநடை.

8. அடைக்கலக் காதை

9. கொலைக்களக் காதை: சிலம்பு கூறல் கொலைக்களக் கதை. அம்மன் கனக்கண்ட கதை உயிர்மீட்புக் கதை.

10. வழக்குரைத்த காதை.

11. குளிர்ச்சிக் காதை: குளிர்ச்சி, வழக்குரைக் காவியம்.

**சிலப்பதிகாரமும் இக்காப்பியமும் :**

கண்ணகியின் காப்பியம் வாய்மொழிக் காப்பியமாக வளர்ந்த வகையே இக்கண்ணகி வழக்குரை இது புதுவகை இலக்கியமாகவே விளங்குகின்றது. இதன் அமைப்பைச் சிலப்பதிகாரத்தோடு ஒக்கவைத்து ஆராய்ந்து, மதுரைப்பல்கலைக் கழகத்துணை வேந்தர் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் எழுதுவது இது: "விபுலானந்தர் பிறந்த மட்டக் காப்பில் வழங்கும் காப்பியம் கண்ணகி வழக்குரை என்ற பெயர் கொண்டு விளங்குகின்றது. சிலப்பதிகாரத்தில் தெய்வமாக வரும் கண்ணகிதான் பாண்டியன் மகள் எனக் கூறிக்கொண்டே தோன்றுகிறாள் இதற்கேற்ப இந்த நூலில் கண்ணகி பாண்டியன் மகளாகவே பிறக்கின்றாள். 'சிலம்புக்கு நாகமணியைப் பரலாகக் கொண்டுவருவது இவ்வளவு விரிவாக அமைந்துள்ளது. வழிநடைக்காதையோ காடுகாண் காதையையும் நாடுகாண் காதையையும் நினைப்பூட்டுவது; அடைக்கலக் காதை என்ற தலைப்பு சிலப்பதிகாரத்தில் வருவதே ஆம். கொலைக்களக் காதையும் அப்படியே. வழக்குரைத்த காதையும் அப்படியே. இங்கே வஞ்சிக் காண்டக்கதையே இல்லை. எனவே வரந்தரு காதைக்கு இடம் இல்லை. ஆகவே குளிர்ச்சிக் காதை என ஒன்று கூற வேண்டியிருக்கிறது. இவ்வளவும் கூறியதால் இதைப் பாடிய மக்கள் சிலப்பதிகாரத்தை முழுவதும் அறியாதவர்கள் என்று சொல்வதற்கில்லை."

இந்த வழக்குரைக் காப்பியம், வெண்பாவால் முடிகின்ற பலதாழிசைகளைப் பெரும்பாலும் கொண்டு அந்தாதித் தொடையமைந்து இடையிடையே விருத்தச் செய்யுள்களும் கலந்து, பொதுமக்கள் படித்து உணர்தற் கேற்ற எளிய நடையுடையதாய் 2226 பாக்களைக் கொண்டு நிறைவுற்றிலங்குகின்றது. தெய்வப் பெண்ணை மனிதப் பெண்ணுக்கிக் காட்டுவதே சிலப்பதிகாரத்திற்கும் இதற்கும் உள்ள வேற்றுமை என்பர் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை. மட்டக்களப்புப் பேச்சுச் சொற்கள் இதில் விரவிவருகின்றன.

## பதிப்பு அமைப்பு

இக்காப்பியத்தினை ஏடுகள் பலவற்ருேடு ஒப்பவைத்து ஆராய்ந்து பண்டித. வி. சி. கந்தையா என்ற தமிழறிஞர் ஓர் அரிய பதிப்பொன்றை (1968) வெளிக்கொணர்ந்துள்ளார். இவ்வழக்குரை நூலின் முதற்காதை வித்துவான். எவ். எச். சி. நடராசா என்ற பெரும் புலவரால் (1965) முன்னும் வெளிவந்துள்ளது. தம்பிலுவில், வீரமுனை, காரைத் திவு, நீலாவணை, களுதாவளை, தேற்ருத்தீவு, செட்டிபாளையம் மகிழடித்தீவு, ஆரப்பற்றை, சிற்ருண்டி, வந்தாறுமூலை ஆகிய ஈழத்து ஊர்களிலிருந்து திரட்டிய பதினெரு ஏடுகள் தேர்ந்தெடுத்து ஆராயப்பெற்று விளக்கப் பெற்றுள்ளன. சிவபிரான் முதலிய பெருங்கடவுளர் வாழ்த்துக்கள் பலவும் உள்ளன. இராமநாதபுரத்தினைப் பிறப்பிடமாகக்கொண்டு, ஈழத்திலே குடியேறி வாழ்ந்த காங்கேசன் என்ற பிற்காலப் புலவர் ஒருவர் இந்நூலாசிரியராகலாம் என்பர் பண்டித. திரு. வி. சி. கந்தையா. அவர் காரைத்தீவிற் குடிபுகுந்து வாழ்ந்திருக்கக்கூடும் என்பது அவர் கருத்து.

சிலப்பதிகாரத்தை ஒட்டி எழுந்த செந்தமிழ்ப்பனுவல்களில் இக்கண்ணகி வழக்குரை சிறந்த வாய்வழிக் காப்பியமாக எளிய பாடல்களைக்கொண்ட இன்றமிழ் நூலாக விளங்குகின்றது. ஈழத்தின் வடமாகாணமாகிய மட்டக்களப்புத் தமிழ்ப் பெருமக்களின் வாழ்வியல் நாகரிகத்தை வரைந்து காட்டும் உயர் பனுவல் இது.

# செய்திகள்

வைத்தீஸ்வரன்கோயிலில்

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு

**புள்ளிருக்கு வேளூர்த் திருநாள்:**

மகாகும்பாபிஷேக விழாவையொட்டி 28-6-69 முதல் 2-7-69 முடிய திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நடைபெற்றது. 28—6—69 அன்று, மாலை 6 மணிக்கு, சீர்காழி திரு S. திருஞானசம்பந்தம், திருவாவடுதுறை திரு D. சோமசுந்தரம் குழுவினர் திருமுறை இன்னிசை நிகழ்த்தினர். சென்னை தவத்திரு வித்துவான் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம் திரு P. S. கைலாசம், B. A. B. L. அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். தொடக்க உரையில் தலத்தின் சிறப்பையும், கயிலைக் குருமணி அவர்களது நிர்வாகச்சிறப்பையும் போற்றினார்கள். அடுத்து திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்கள் மூர்த்திச்சிறப்புப் பற்றிப் பேசினார்கள். கோயில்கள் மனம் குவிவதற்குரிய இடம், கோயிலில் உள்ள மூர்த்திகளைக் கடவுளெனவே பாவித்துத் தொழுவது நம் சமய மரபு என்று குறிப்பிட்டார்கள். தலச்சிறப்புப்பற்றி சென்னை திரு. ஔவை. நடராசன் M. A., அவர்கள் விரிவுரையாற்றினார்கள் தன்வந்திரி என்னும் சித்தர் தவம் பெருக்கிய இடம் இத்தலம். இத்தலத்தின் மண்ணுக்கும் மகத்துவம் உண்டு என்று குறிப்பிட்டார்கள். சென்னை வானொலி நிலைய இசையமைப்பாளர் திரு. கே. சி தியாகராசன் குழுவினர் குமரகுருபரர் பற்றி இசைக்கதை நிகழ்த்தினர் சென்னை பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் முருக நாம பஜனை செய்தார்கள்.

**29—6—69 குடமுழுக்குத் தத்துவத் திருநாள் :**

துறைசை திரு. T. M. விஸ்வலிங்கம், திரு T. M. சபாபதி குழுவினரின் திருமுறை இசையரங்கோடு மாநாடு தொடங்கியது. தஞ்சை அறநிலையத்துறை ஆணையர் திரு T. N. சிங்காரவேலன் B. A. B. L. அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். பெருஞ்சாந்தி விழாக் காணுதல் பிறவிப் பெரும்பயன்களில் ஒன்று என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். காஞ்சிபுரம் தொண்டை மண்டலம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார்கள்

தோத்திர சாத்திரங்கள், உயிர்கள் உய்வதற்கு இறைவனால் தரப்பட்ட ஞானநூல்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். தருமையாதீன ஆகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் யாகசாலையின் அமைப்புகள், தத்துவங்கள் ஆகியவைபற்றி விரிவுரை நிகழ்த்தினர். திருவாடானை சிவஸ்ரீ ஐயாமணி சிவாசாரியார் அவர்கள் கும்பாபிஷேகத் தத்துவம் பற்றி விரிவுரை நிகழ்த்தினர் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ. அனந்தராம தீட்சிதர் அவர்கள் சிவதத்துவ மகிமை பற்றி வேதாகமங்களோடு பூசலார் நாயனரின் வரலாற்று மேற்கோள்காட்டி விளக்கவுரை நிகழ்த்தினர். செந்தில்குமாரி ராஜம் குழுவினரின் செந்திற்குறவஞ்சி நாட்டிய நாடகம் நடைபெற்றது.

## பன்னிருதிருமுறைத் திருநாள் :

30—6—69 திங்கட்கிழமை சென்னை திரு. சுந்தரேச தேசிகர், பள்ளத்தூர் திரு. தி. இரத்தினசபாபதி தேசிகர் குழுவினரின் இசையரங்கோடு மாலை 6-மணிக்கு விழா தொடங்கியது. சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் சமயப்பணிகளைப் பாராட்டித் தொடக்கவுரை நிகழ்த்தினர்கள். திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A B. L., அவர்கள் 'நால்வர் நற்றமிழ்' பற்றி விரிவுரையாற்றுகையில் திருமுறைகள் பிரணவ அமைப்புக்குள் அடங்குமாற்றை எடுத்து விளக்கினர்கள். சென்னை கலைமகள் ஆசிரியர் செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'மந்திரத்தமிழ்' பற்றி விரிவுரையாற்றினர். திருமந்திரம் ஆகமங்களின் சாரமாக அமைந்தவை என்று குறிப்பிட்டார்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை, வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் சேக்கிழார் செந்தமிழைக் கம்பராமாயணம் போன்ற இலக்கிய வர்ணனைகளோடு ஒப்பிட்டுப் பேசினர். திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் கந்தன் கருணைபற்றி இசைக்கதை நிகழ்த்தினர் கந்தபுராணவரலாற்றை எடுத்து மேற்கோள்களோடு இனிது விளக்கினர்கள்.

## சித்தாந்த சாத்திரத் திருநாள் :

1—7—69 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சித்தாந்த சாத்திரத் திருநாள். திரு. ஆ. விநாயக முதலியார், திரு. கு. புண்ணியகோடி குழுவினரின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. சென்னை அறநிலைய ஆணையர் திரு. இராம சுப்பிரமணியம் B. A. B. L. அவர்கள் ஆற்றிய தொடக்கவுரையில் தருமையாதீனம் செய்துவரும் திருக்கோயில் திருப்பணிகளைப்

பாராட்டி மிகத் தூய்மையான முறையில் கோயில்கள் ஆதீனத்தில் பரிபாலிக்கப்படுவதை எடுத்து விளக்கினர். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர்கள் சமய மேம்பாட்டிற்குப் பொது மக்களின் ஆதரவு பெருகிவருவதைக் குறிப்பிட்டார்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் தத்துவ விளக்கம்பற்றி விரிவுரையாற்றினர். சைவ சித்தாந்தநெறி சைவ சமயத்திற்கு அரண்போன்றது. எச்சமயங்களிலும் இல்லாத தத்துவ விளக்கம் சைவ சித்தாந்தத்தில் உண்டு என்று குறிப்பிட்டார். தருமையாதீனப்புலவர் துறைசை திரு. க வச்சிரவேலுமுதலியார் B. A.. L. T. அவர்கள் கடவுள் தத்துவம்பற்றி விரிவுரையாற்றுகையில் உலக சமயங்கள் அனைத்தும் கூருத உயர்ந்த தத்துவம் சைவ சித்தாந்தத்தில் உள்ளன என்று குறிப்பிட்டார்கள். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், தருமையாதீனப்புலவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார் அவர்கள் உயிர்த் தத்துவம்பற்றி விளக்கவுரை நிகழ்த்தினர்கள் சைவசித்தாந்த அடிப்படையில் உயிரினங்கள் கூறப்படுவதை விளக்கினர்கள். சென்னை திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் M. O. L. அவர்கள் தளைத்தத்துவம் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில் பாசநீக்கமும் சிவப்பேறும் வாழ்க்கையின் குறிக்கோள்கள் என்று கூறினர்கள். ஏழிசை வல்லபி திருமதி கே. பி சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசை இரவு 2 மணிவரை நிகழ்ந்தது.

### சித்த மருத்துவத் திருநாள் :

2—7—69 மாலை சித்த மருத்துவத் திருநாள் பழநி திரு. சுப்பையா முதலியார், பழநி திரு. அ. குமாரசாமி தேசிகர் குழுவினரின் திருமுறை இசையரங்கோடு மாநாடு தொடங்கியது. பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் தவத்திரு இராமசாமி அடிகள் அவர்களின் தொடக்கவுரை நிகழ்ந்தது. அடிகளார் சித்தவைத்தியக்கலை தமிழ்நாட்டின் பழங்கலை என்று குறிப்பிட்டார்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம் திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் B A B L அவர்கள் தலைமையுரையில் மருத்துவ முறையில் சித்தர்கள் செய்துள்ள சாதனைகளைக் குறிப்பிட்டார்கள் திருச்சி. திரு. கி ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சித்தமருத்துவச் சிறப்புபற்றி விரிவுரையாற்றுகையில் சித்தர்கள் போற்றிய மருத்துவக்கலை ஆங்கில மருத்துவமுறைகளுக்கு மேலானது என்று கூறினர்கள் வேலூர், சித்தமருத்துவ வைத்தியசாலை மருத்துவர், திரு. ஆ இராமகிருஷ்ணன் அவர்கள்

சித்தர்கள் மூலிகையின் சிறப்புக்களை எடுத்துரைத்தார். மதுரை இரஞ்சிதகான திரு. சோமசுந்தரம் குழுவினரின் இன்னிசையரங்குடன் மாநாடு இனிது நிறைவெய்தியது.

**பட்டமளிப்பு :**

மகாகும்பாபிஷேக விழாவையொட்டி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தக்கார் பலரைப் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள்.

தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர் சிவாகம வித்வான், சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்களுக்கு சிவாகம ரத்னாகரம் எனப் பட்டமளித்துத் தங்கத் தோடா வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

மதுரை ஸ்ரீ சுந்தரேசபட்டர் அவர்களுக்கு 'சிவநெறிச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

சுசிந்திரம் டாக்டர் திரு. P. நீலகண்ட சர்மா அவர்களுக்கு, 'ஆயுர்வேத ரத்னாகரம்' என்னும் பட்டமளித்துப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்கள்.

சிறந்த மருத்துவப் பணிபுரியும் சைவ சீலரும் வேலூர் மகாகும்பாபிஷேக விழாப் பணிகள் பலவற்றில் பங்குகொண்டவரும் ஆதீனத்திருமடத்து அன்பருமாகிய சிதம்பரம் டாக்டர் திரு. K. அரங்கசாமிப்பிள்ளை அவர்களுக்கு, 'அறப்பணிச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள்.

திருக்கோயில் திருப்பணிகளில் தலைசிறந்த சிதம்பரம் திரு. கோவிந்தராசு அவர்களுக்கு, 'சித்திரச்சிற்பச் செம்மணி' என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி ஆசீர்வதித்தார்கள்.

திருக்கோயில்களுக்குப் பொன்னணி கலன்கள், வெள்ளிக் கதவுகள் முதலியவற்றைச் சிறந்த வேலைப்பாடுகளுடன் செய்து தரும் மாயூரம் A. R. C. சுந்தரம் செட்டியார் அவர்களுக்கு, 'அணிகல அருங்கலை வித்தகர்' என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார்கள்.

**மகாகும்பாபிஷேகத் திருநாள் :**

2—7—69 புதன்கிழமை லக்ஷக்கணக்கானமக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த புண்ணியத் திருநாள்; ஆம், இன்றுதான் காலை 9-30 மணி அளவில் மகாகும்பாபிஷேகம்.

காலை 5 மணிக்கு யாகசாலையில் ஹோமங்கள் தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருந்தன. மக்கள் வெள்ளம் காலை மணி 4க்கேமேலைக் கோபுரவாயில் வழியாக திருக்கோயிலுக்குள் வரத் தொடங்கிவிட்டது. வேளூரைச்சூழ நான்கு வீதிகளிலும், வயல் வெளிகளிலும் எங்கு பார்த்தாலும் மக்கள் திரள். பேருந்துகள் அனைத்தும் ஊருக்கு எல்லையில் நிறுத்தப்பெற்றன. அனுமதியுள்ள உந்துவண்டிகளே ஊருக்குள் அனுமதிக்கப்பெற்றன. அதிகாலையில் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும, குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், இளவரசு சுவாமிகளும் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினர்கள். அதிகாலையிலேயே தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கட்டளை மடத்திற்கு எழுந்தருளினர்கள், 7-30 மணிக்கு யாகசாலையில் பூர்ணுகுதி நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி யாகசாலை தரிசனம் செய்தனர். கடம் புறப்பட்டது சுவாமி தளம் அம்பாள் தளம ஏனைய தளங்கள் மகிற்சுவர்கள் திருவீதி மாளிகைகளிலுள்ள மேல் தளங்கள் எல்லாவற்றிலும் மக்கள் திரள். 9 மணியளவில் கடங்கள் மேள வாத்திய வேத சிவாகம திருமுறைப் பாராயணத்துடனும் பிராகாரத்தில் வலமாக எழுந்தருளச் செய்யப்பட்டு விமானங்களை அடைந்தன. திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தார் மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகள் அனைத்தையும ஒலிபரப்புச் செய்தனர். 8-மணி தொடங்கி, பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் முருக நாம பஜனை செய்து கொண்டிருந்தார்கள்.

9-30 மணியளவில் வேதசிவாகம திருமுறை முழக்கங்களோடு மங்கல வாத்தியங்கள் இசைக்க அன்பர்களின் அரஹர ஒலி முழக்கோடு ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஸ்ரீ தையனுயகி ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி மற்றும ஸ்ரீ சோமாஸ்கந்தர், ஸ்ரீ நடராசர் விமானங்களுக்கும், இராஜகோபுரங்களுக்கும மகாகும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது.

உபய கருடன் விமானங்களைச்சுற்றி வட்டமிட்டுப் பறந்தன. சினிமாச் செய்திச் சுருள் ஸ்தாபனத்தினர் அனைத்துக் காட்சிகளையும் படங்கள் எடுத்த வண்ணமிருந்தனர். விமானங்கள் இராஜகோபுரங்களுக்குத் தீபாராதனை நடைபெற்றதும் அன்பர்கள் தீர்த்தப் பிரசாதம் பெற்றுக்கொண்டு வெளியே செல்லமுற்பட்டனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள், நீதிபதிகள், மற்றும் பெருமக்கள் முதலியோர் அனைவருடனும் மூலஸ்தானங்களுக்குச் சென்று மூர்த்திகளுக்கு யாக கலசாபிஷேகங்களை முறைப்படி செய்வித்து வழிபாடியற்றினர். தொடர்ந்து மகாபிஷேகம், அர்ச்சனை தீபாராதனைகள் நடைபெற்றன. பின்னர் வாழ்த்துரை நிகழ்ச்சி தொடங்கியது.

**வாழ்த்துரைக் கூட்டம் :**

திருக்கோயிலில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி சந்நிதியில் வாழ்த்துரைக் கூட்டம் தொடங்கியது. மகாகும்பாபிஷேக விழாவை மிகச் சிறப்பாக நடத்தியருளிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் உலக மக்களுக்கு வாழ்த்துச்செய்தியை வானொலி மூலம் வழங்கியருளினார்கள்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் தெய்வ நம்பிக்கை இருக்கவேண்டும். தெய்வத்தின் திருவருளைப் பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோள். திருக்கோயில் வழிபாடுகளால்தான் மனிதன் திருவருளைப் பெறமுடியும் என்பதை அறிந்த நம் முன்னோர் ஊருக்கு ஓர் கோயில்களைக் கட்டியுள்ளனர். கோயில்கள் மனித கலாசாரங்களின் உறைவிடமாயுள்ளன. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கோயில்களைப் புதுக்கி குடமுழுக்குவிழா நிகழ்த்தல் இன்றியமையாதது. வேளூர் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றாலும் சிறந்த தலம். வைத்தியநாதர் உடற்பிணி உயிர்ப்பிணி மருத்துவர். அம்மையோ அருள்வழங்கும் தாய். செல்வ முத்தையன் ஆனேறுயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும் அருமருந்தாய் நிற்கும் பெருமான். கலியுகத்திலும் கண்கண்ட கடவுளாய் விளங்கும் இக்கடவுளரின் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவைக் கண்டுகளிக்க வந்துள்ள அன்பர்களுக்கும் இவ்விழாவை வானொலி மூலம் அறிந்து இன்புறும் உலக மக்களுக்கும் செல்வமுத்தையன் திருவருளால் எல்லா நலன்களும் இனிது விளைக, என வாழ்த்துகின்றோம்" என்று வாழ்த்துரை கூறினார்கள். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் கிருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு. இரா இராம சுப்பிரமணியம் B A.B.L. டாக்டர் திரு. இரத்தினவேல்சுப்பிரமணியம், உயர்நீதிபதிகள், கனம். R. சதாசிவம், கனம். N. கிருஷ்ணசாமி ரெட்டியார், டாக்டர் திரு. அரங்கசாமிப்பிள்ளை ஆகியோர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்குத் தமிழக மக்களின் சார்பில் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

மாலை 5 மணிக்கு ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு விசேஷ அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் நடைபெற்றன. இரவு 7 மணிக்கு ஸ்ரீ தையல்நாயகி அம்மைக்கும், ஸ்ரீ வைத்திய நாத சுவாமிக்கும் திருக்கல்யாண மகோற்சவம் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருக்கோவிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்களுக்குப் பிரசாதப் பைகளை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்அவர்கள்வழங்கியருளினார்கள்.

இரவு 10 மணியளவில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெற்றது. நான்கு வெள்ளி ரதங்களை மின்விளக்குகளால் அலங்காரம் செய்து, விசேஷ சாத்துப்படிகளுடன் பஞ்சமூர்த்திகளும் திருவீதி உலா வந்த காட்சி அன்பர்களுக்குப் பெருவிருந்தாய் அமைந்திருந்தது. சிறந்த நாதசுர இன்னிசை, கிளாரினெட் இன்னிசை, பொய்க்கால்குதிரை, மயிலாட்டம் வாணவேடிக்கை முதலியவற்றுடன் திருவீதி உலா நடைபெற்றது.

## ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் விஜயம் :

திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், இளவரசு சுவாமிகள், தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம், பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் ஸ்ரீமத் சுவாமிகள் முதலியோர் மகாகும்பாபிஷேக தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

## பெருமக்கள் :

வேளூர் கும்பாபிஷேக விழாவிற்குத் தமிழகத்திலிருந்து அன்பர் பலரும் வந்திருந்து வழிபட்டனர். தமிழ்நாட்டு ஆட்சித் துறையினர் பலரும் வந்திருந்தனர்.

சென்னை உயர்மன்ற நீதிபதிகள் கனம் திரு. சதாசிவம், கனம் திரு N. கிருஷ்ணசாமி ரெட்டியார், கனம் திரு கைலாசம் டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம், டாக்டர் திரு K அரங்க சாமிப்பிள்ளை அறநிலைய ஆணையர் திரு. இராமசுப்பிரமணியம், B. A., B. L., துணை ஆணையர் திரு. N சிங்காரவேலு தெய்வீகப் பேரவை செயலர் திரு. அர்ச்சுனன், காவல்துறை மாவட்ட அதிகாரி திரு. சுப்பராயன் தஞ்சைமாவட்ட ஆட்சித்துறைக் காவலர் ஆகியோர் வந்து வழிபட்டனர்.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

(சௌம்யஞு ஆடிமீ 1௳ முதல் 31௳ முடிய)

(16—7—69 முதல் 16—8—69 முடிய)

சௌம்யஞு ஆடிமீ 1௳ புதவாரம் (16—7—69) புத துவிதியையும், ஆயில்ய நக்ஷத்திரமும், வஜ்ரயோகத்திலும் பகல் 18 நாழிகை 8 விநாடியளவில் துலா லக்னத்தில், ராகுகால வேளையில், லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான், தக்ஷிணாயன புண்ணியகாலமாக கடக ராசிக்குப் பிரவேசம் செய்கிறார். ஸ்ரீ பிரவேசகால பலம் பூர்ணமான சுபத்தைத்தர பிரார்த்திப் போம். ஸமஸ்த மங்களமும் உண்டாகுக.

## 1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். தனம், ஜீவனம், குடும்பம் இவைகளில் பல மாறுதல்களை உண்டுபண் ணும். ஸஞ்சாரம் அதிகமாகும், ஆரோக்யக் குறைவு காட்டும். தெய்வபலம் காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். இடம் மாறுதலும் ஜீவன விருத்தியும் ஏற்படும். கிரய விக்ரய லாபம் ஏற்படும். தேவதா குரு தரிசனம் கிடைக்கும். யாத்ரா பலன் கிடைக்கும். நூதனமாகத் தொழில் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி பாதங்களும், பூர்ணமான சுபத்தையே தரும். ஆரோக்யம் சுகம் உண்டாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். நூதனமாக வஸ்திராபரண சேர்க்கையும் வித்யாவிருத் தியும் உண்டாகும்; ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். வியவசாயம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிரய விக்ரயம் ஆகும். பெரிய குடும்பங்களில் பாகப் பிரிவினைகள் ஏற்படும். வித்யாவிருத்தியாகும். நஷ்டமானபொருள் வந்து சேரும். கடன் நீங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼**

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனையே தரும். ஜீவனம் ஓங்கும். ஸ்திரவாஸமும் மேலோர் பெரியோர்களின் அன்பும் கிடைக்கும். ஸ்த்ரீ மூலமாகப் பொருள்கள் எதிர்பாராமல் வந்து சேரும். ஆரோக்யம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½**

கன்னியாராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும், ஆரோக்யக்குறைவு காட்டும். வீண்செலவும், மேலோர் பெரியோர்களின் மனஸ்தாபமும் உண்டுபண்ணும். நூதனமாக விவகாரம் உண்டுபண்ணும். விவசாய காரியங்களில் தவக்கம் ஏற்படும். சகல துரிதங்களும், கவலைகளும் தெய்வ பலத்தால் நீங்கி சுபம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனையே தரும் உலகப் பிரசித்தியும் தெய்வபலமும் பிரகாசிக்கும். தாவர சங்கம சொத்துக்கள் சேரும். நூதனமாக ஜீவனலாபம் ஏற்படும். அசாத்யமெல்லாம் சுலப சாத்தியமாகும், சத்ருக்கள் நாசம் அடைவார்கள், ஜயம் உண்டாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை**

விருச்சிகராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். வரவு, செலவு சமமாகும். அதிகமான உழைப்பில் லாபம் உண்டாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். மனம் எப்பொழுதும் குழப்பமாக இருக்கும், தூரதேசத்திலிருந்து பிரியமான சமாசாரம் கிடைக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத் தரும். குடும்பம் விலக்கும். புத்திராதிகளால் நன்மை ஏற்படும். அடிக்கடி பிரயாணங்கள் உண்டாகும், பந்துமித்ரர்களாலும் பெரியோர்களாலும் நன்மை ஏற்படும். தெய்வ பலத்தால் சகலமும் சாத்தியமாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

### 10 மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபத்தையே தரும். ஸ்திர ஜீவனமும் இல்லற வாழ்க்கையும் ஓங்கும், ஆரோக்யம் உண்டு பண்ணும், எதிர்பாராதபடி மேல்பதவிகள் கிடைக்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 11 கும்பம்-அவிட்டம் ½. - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும், அதிக உழைப்பும் அதிக லாபமும் தரும், வியாதி நீங்கும், நஷ்டமான பொருள் வந்துசேரும். ஜீவனத்தில் மாறுதல் ஏற்படும். விவசாயம் தவக்கப்படும். பரிஜனங்களால் உபாதி உண்டாகும். பக்தர்களைக் காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 12 மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபத்தையே தரும், நன்மைகள் தானுக ஏற்படும் ஆரோக்யம்தரும், உலக பிரசித்தி ஏற்படும். ஸ்திரசுகஜீவனமும் ஏற்படும். வித்தை விருத்தியாகும் அனேகவிதமாக லாபம் உண்டாகும். தெய்வபலம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு: மேற்படி, தெக்ஷிணாயனத்தில் கிரக பலன்களின் அமைப்பினுல் பல மாறுதல்களைக் காட்டுகிறது. விவசாய விருத்தியும் உலக சுபிக்ஷமும் ஏற்பட்டு பிரஜைகள் நன்மையை அடைய பிராசீன தர்மங்களும், தெய்வபலமும்தான் காக்க வேண்டும். சுபம் உண்டாகும் கடவுள் காப்பார்.

---